ஜனவரி – மார்ச் (2025)

# கடந்து வந்த பாதை

## மின்னிதழ்

WWW.JIHTN.ORG




## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

தமிழ்நாடு - புதுச்சேரி

## கடையநல்லூர் ராபிதத்துல் உலமாவின் ஆலோசனை கூட்டம்

*06/07/1446 (07/01/2025) செவ்வாய்க்கிழமை காலை 10:00 மணி முதல் 12:00 மணி வரை அல்லாஹ்வின் அருளால் கடையநல்லூர் ராபிததுல் உலமா சார்பாக ஜாமிவுல் அன்வார் பள்ளிவாசலில் வைத்து மாநாட்டின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. மௌலவி K.A. அஹமது முஹ்யித்தீன் ஃபைஜி அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள், கடையநல்லூர் பைஜுல் அன்வார் அரபிக் கல்லூரியின் முதல்வரும், தென்காசி மாவட்ட ஜமாத்துல் உலமா செயலாளரும், தென்காசி மாவட்ட அரசு காழி A.Y. முகைதீன் ஃபைஜி, பாஸில் ராஷாதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.*

*மௌலவி முஹ்யித்தீன் குட்டி உமரி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். கடையநல்லூர் வட்டார ஜமாஅத்துல் உலமா செயலாளர் மௌலவி இப்ராஹிம் அன்வாரி அவர்கள் ஜமாஅத்தே இஸ்லாமியுடன் தனக்கு உண்டான தொடர்பு மற்றும் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். இறுதியாக வந்திருந்த ஆலிம்கள் தங்களது கருத்தை பகிர்ந்து கொண்டார்கள் மாநாட்டில் தாங்கள் கலந்து கொள்வதற்கு விருப்பமும் தெரிவித்தார்கள்.*



*இந்த நிகழ்ச்சியில் 50 ஆலிம்கள் பங்கேற்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். கடையநல்லூர் வட்டார ஜமாத்தே இஸ்லாமி ஹிந்தின் பொறுப்பாளர்கள் இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார்கள். எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே!!*

## திருச்சி ரபிததுல் உலமாவின் ஆலோசனைக் கூட்டம்

*அல்லாஹ்வின் அளப்பெரும் அருளால் இன்று திருச்சி பீமநகர் இலாஹி பள்ளிவாசலில் ஜனவரி 28 ஆலிம்கள் மாநில மாநாடு அறிமுக கூட்டம் 11:00 மணி முதல் 12:00 மணி வரை நடைபெற்றது.*

*மாநாட்டின் கன்வீனர் மௌலவி. முஹம்மது நாசர் புகாரி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.*



## கோவை மாநகரின் புதிய காவல்துறை ஆணையரை மரியாதை நிமித்தமாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை தலைவர்கள் சந்திப்பு

*கோவை மாநகரின் புதிய காவல்துறை ஆணையராக மரியாதைக்குரிய திரு. A. சரவண சுந்தர் IPS அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.*

*இன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S. உமர் ஃபாரூக் அவர்களின் தலைமையிலான கோவை நிர்வாகிகள் கோவை காவல்துறை ஆணையர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.*

*கோவை மாநகரை மென்மேலும் வளர்ச்சிக்கான பாதையில் திரு. A. சரவண சுந்தர் IPS அவர்கள் கொண்டு செல்ல வேண்டும் என்றும், அதற்கான ஒத்துழைப்பை ஜமாஅத் நல்கும் என்றும் வாழ்த்துக்களையும், பிரார்த்தனைகளும் தெரிவிக்கப்பட்டது.*



*பெரு மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட காவல் ஆணையர் அவர்கள் தொடர்ந்து ஜமாஅத்தின் மக்களுக்கான அனைத்துப் பணிகளிலும் காவல்துறையின் ஒத்துழைப்பை வழங்குவோம் என்று தெரிவித்தார்.*

## சமுதாய விழிப்புணர்வு சிறப்பு நிகழ்ச்சி

*ஜமாஅத்தேஇஸ்லாமி ஹிந்த் பொள்ளாச்சி வட்டம் சார்பாக சமுதாய விழிப்புணர்வு சிறப்பு நிகழ்ச்சி 5.01.2025 அன்று மிக சிறப்பாக நடைபெற்றது அல்ஹம்துலில்லாஹ்*

*"இஸ்லாம் கூறும் இனிய குடும்பம்" என்ற தலைப்பில் மௌலவி ஃபக்கீர் முஹம்மத் பாகவி அவர்களும்,*




*"இஸ்லாத்தில் கூட்டமைப்பின் முக்கியத்துவம் "என்ற தலைப்பில் மௌலவி இஸ்மாயில் இம்தாதி அவர்களும் மிகச் சிறப்பான முறையில் உரையாற்றினார்கள்.*

*பெண்கள் உட்பட சுமார் 150 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.*

## இரத்த தான முகாம்

*இறை இல்லம் இரத்ததான இல்லாமாக...*
*திருப்பூர் சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு சார்பாக இன்று 12.01.2025 திருப்பூர் மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசலில் தன்னார்வ இரத்ததான முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வை சாலிடாரிட்டி தமிழ் நாடு மாநிலத் தலைவர் சகோதரர் கமாலுதீன் அவர்கள் துவக்கி வைத்தார்.*



*குருதிக்கொடை வழங்கியவர்களுக்கு திருப்பூர் அரசு பொது மருத்துவமனை சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.*

*40க்கும் மேற்பட்ட தன்னார்வ இரத்த கொடையாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர்.*

*சாலிடாரிட்டி திருப்பூர் மாவட்டத் தலைவர் இஸ்மாயில் உட்பட அனைத்து ஊழியர்களும் இந்நிகழ்வை திறம்பட ஏற்பாடு செய்து வழிநடத்தினர்.*

*மேலும் ஜமாஅத்தே இஸ்லாமி திருப்பூர் உறுப்பினர்கள் ஊழியர்கள் ஆதரவாளர்கள் இந்நிகழ்விற்கு உறுதுணையாக இருந்தனர்.*

*வருகை தந்த அனைத்து மருத்துவர்களுக்கும் இஸ்லாமிய நூல்கள் நினைவு பரிசாக வழங்கப்பட்டது.*

*இறுதியாக திருப்பூர் அரசு மருத்துவமனை சலிடாரிட்டி இளைஞர் அமைப்புக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கியது.*

*சகோதர சமுதாயத்தை சேர்ந்த இளைஞர்களும் பள்ளிவாசலில் இரத்த தான நிகழ்வில் கலந்து கொண்டார்கள் என்பது மகிழ்ச்சியாக உள்ளது.*



## தேனி மாவட்ட ஆலிம்களின் சந்திப்பு

*11/07/1446 (12/01/2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி முதல் இரவு இஷா தொழுகை வரை அல்லாஹ்வின் அருளால் தேனி மாவட்ட ஆலிம்களை சந்தித்தோம்.*

*முதலாவதாக முத்து தேவன் பட்டியில் உள்ள அல்பலாஹிய்யா மதரஸாவின் ஆசிரியர்களை சந்தித்தோம். பிறகு சின்னமனூர், கோட்டூர் ஆலிம்களை சந்தித்தோம்.*

*அடுத்து தேனி மாவட்ட ஜமாத்துல் உலமா தலைவர் மௌலவி முஹம்மது ஹனீஃப் பாகவி அவர்களை சந்தித்தோம்.*

*பிறகு கம்பத்தில் உள்ள அத்தாயீ மதரசாவினுடைய முதல்வர், ஆசிரியர்களை சந்தித்தோம்.*

*அடுத்து கம்பத்தில் உள்ள தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமாவின் துணைத் தலைவர் மௌலவி அலாவுதீன் மிஸ்பாஹி ஹஷரத் அவர்களை சந்தித்தோம். அதன் பிறகு உத்தமபாளையம் அஸ்ஹாபுஸ்ஸூப்பா மதரஸாவின் பொறுப்பாளர், உத்தமபாளையத்தின் ஜமாத்துல் உலமாவின் பொறுப்பாளர்களையும் சந்தித்தோம்.*

*அடுத்து மகரிப் தொழுகைக்கு பின்னால் தேனி மாவட்ட ஜமாத்துல் உலமாவின் செயலாளர், பொருளாளர் மற்றும் முக்கிய ஜமாத்துல் உலமாவின் பொறுப்பாளர்களையும் சந்தித்தோம். அனைவருக்கும் மாநாட்டை அறிமுகம் செய்து அழைப்பு கொடுக்கப்பட்டது சந்தித்த ஆலிம்கள் அனைவரும் வருவதாக வாக்களித்துள்ளார்கள்.*

*கலந்து கொண்டவர்கள் மௌலவி அஹ்மத் முஹைதீன் ஃபைஜி,மௌலவி அபூபக்கர் உமரி, மௌலவி ஹபீபுல்லாஹ் யூசுஃபி, தேனி மாவட்ட JIH பொறுப்பாளர் அபுதாஹிர், அப்துல் காதர் பாஷா, சின்னமனூர் சாதிக், பாளையம் பொறுப்பாளர் முகம்மது இக்பால் ஆகியோர்கள் ஆலிம்களை சந்திப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்து தந்தார்கள்.*



## இளைஞர்கள் தினம் சிறப்பு நிகழ்ச்சி

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 அன்று தேசிய இளைஞர்கள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசு, 1984ல், தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாட முடிவு செய்தது.

தேசிய இளைஞர் தினம் என்பது இளைஞர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறப்பு நாள். இந்த நாள் இளைஞர்களுக்கான புரிதல், பாராட்டு மற்றும் பொறுப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது சமூக ஈடுபாட்டை ஊக்குவிக்கிறது மற்றும் செயல்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்கள் மூலம் தேசிய இளைஞர் தினம் ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அனுசரிக்கப்படுகிறது. ஊர்வலங்கள், இளைஞர் மாநாடுகள், உரைகள், கருத்தரங்குகள் மற்றும் பிற நிகழ்வுகள் ஜனவரி 12 அன்று தேசிய இளைஞர் தினத்தைக் குறிக்கின்றன. மேலும், நாட்டைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்கு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இளைஞர்கள் தங்கள் ஆற்றலையும் நேரத்தையும் பயன்படுத்தி தங்கள் நாட்டை நேர்மறையாக வளர்க்க வேண்டும் என்ற வகையில் இந்தியா தேசிய இளைஞர் தினத்தை கொண்டாடுகிறது.

தற்போதுள்ள சமூக சூழ்நிலையில் இளைஞர்கள் சமூகப் பொறுப்பை உணராத இளைஞர்களாக பெருகி இருப்பதையும், நாட்டில் நிலவக்கூடிய லஞ்சம், லாவண்யம், ஒழுக்க கேடுகள் குறித்து அக்கறையற்ற நிலையில் இருப்பதையும் உணர முடிகின்றது.

ஆகவே, இந்நிலையை மாற்றியமைப்பதில் ஜமாஅத் இஸ்லாமி ஹிந்த் ஊழியர் வட்டம் சார்பாக ஜனவரி 12 அன்று இளைஞர்களை சந்தித்து இளைஞர்கள் தின வாழ்த்து தெரிவித்து அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி அவர்களின் பொறுப்பை உணரக்கூடிய வகையில் சிறிய கலந்துரையாடல்களையும் நடத்தப்பட்டன.



மக்கா நகர்,தீன் நகர்,ரமலான் நகர்,ஓடைகுளம்,ஊராம்பட்டி இன்னும் பல பகுதிகளில் இளைஞர்களை சந்தித்து அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டு சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது.

## விருதுநகர் மாவட்ட ஆலிம்களின் சந்திப்பு

*13/07/1446 (14/01/2025) செவ்வாய்க்கிழமை காலை 08:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை அல்லாஹ்வின் அருளால் விருதுநகர் மாவட்ட பொறுப்பாளர் ஜனாப் சாகுல் ஹமீது அவர்களும், மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்களும், மௌலவி அஹ்மத் முஹ்யித்தீன் பைஜி அவர்களும், மகாராஜபுரம், கூமாபட்டி , அருப்புக்கோட்டை, ஆவுடையாபுரம் ஆகிய ஊர்களுக்குச் சென்று விருதுநகர் வட்டார, மாவட்ட ஜமாஅத்துல் உலமாவின் தலைவர், செயலர், பொருளாளர், இன்னும் மற்ற ஆலிம்களையும் சந்தித்து மாநாட்டின் குறிக்கோள் தெளிவுபடுத்தப்பட்டு அனைவரும் கலந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினோம்.*



*சந்தித்த ஆலிம்கள் அனைவரும் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.*

# ஆலிமாக்கள் மாநாடு

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி சார்பாக ஏற்பாடு செய்திருந்த ஆலிமாக்களுக்கான மதுரை மண்டல மாநாடு வியாழக்கிழமை 16/01/2025 மதுரை விஸ்வநாத புறம் பகுதியில் உள்ள ரங்கா மஹாலில் நடைபெற்றது.*

*நிகழ்ச்சியில்ஆலிமா நஜ்மா சுல்தானா கிராத் ஓதினார்கள்*

*மதுரை மகளிரணி பொறுப்பாளர் ஜெரினா யூசுப் வரவேற்புரையாற்றினார்கள்*

*மாநிலத் தலைவர் மௌலவி A.முஹம்மத் ஹனிஃபா மன்பயீ தலைமையுரையாற்றினார்கள்*

*மாநில துணைத் தலைவர் K.M சிராஜ் அஹமது தொடக்க உரையாற்றினார்கள்.*



*சமுதாய புத்தமைப்பில் ஆலிமாக்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் ஆலிமா சுமையா*

ஹாதியா. கோவை ஹிதாயா பெண்கள் இஸ்லாமிய கல்லூரி பேராசிரியர் சிறப்பரையாற்றினார்கள்.



தீனை நிலைநாட்டுவதில் ஆலிமாக்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் மௌலவி நூஹ் மஹ்ளரி. திருச்சி அஸ்ஸலாம் அரபிக்கல்லூரி பேராசிரியர் சிறப்புரையாற்றினார்கள்.

தேனி மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் சகோதரி பரிதா அபுதாஹிர் நிறைவுறையாற்றினார்கள்.

அல்ஹம்துலில்லாஹ். மதுரை, கம்பம், தேனி, போடி, திண்டுக்கல், சின்னமனூர், உத்தமபாளையம், மேலூர் விருதுநகர், திருமங்கலம், தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் இருந்து மொத்தம் 225 பேர் கலந்து கொண்டனர் அதில் 175 பேர் ஆலிமாக்கள் பங்கேற்றார்கள்.

## CIO Olympics விளையாட்டுப் போட்டிகள்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி நடத்திய CIO Olympics விளையாட்டுப் போட்டிகள் நேசம் மக்கள் நல சேவை மைய திடலில் 17.01.25 வெள்ளியன்று நடைபெற்றது.

30க்கும் மேற்பட்ட போட்டிகளில் சுமார் 90க்கும் மேற்பட்ட குழந்தைகளும், 35க்கும் மேற்பட்ட GIO மாணவிகளும் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழ்ச்சியை CIO பொறுப்பாளர் சகோதரி நிஹ்மத் ஹசீனா தலைமையேற்று நடத்த, GIO பொறுப்பாளர் சகோதரி புதுரா பஜிலா வரவேற்புரை ஆற்ற, தேசிய முன்னாள் ராணுவ வீரர்கள் ஒருங்கிணைப்பு குழுவின் தென்மண்டல தலைவரும், சமூக நல்லினக்க பேரவையின் கௌரவத் தலைவரும் லயன்.சுபேதார். V.மகாராஜன் அவர்கள் விளையாட்டு வீரர்களின் பேரணியை துவக்கி வைக்க, மாநகர ஜமாத் தலைவர் சர்புதீன் அவர்கள் GIO கொடி ஏற்றி வைக்க, அகில இந்திய திருணாமுல் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் ஹக்கிம் அவர்களும், கலைஞர் நூலக நிர்வாகியும், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு உறுப்பினருமான ஜெயபிரகாஷ் அவர்களும்,

*அரசு சார்நிலை கருவூல கணக்கரும் TNPSC பயிற்றுணருமான கவிஞர் ஷர்ஜிலா பர்வீன் யாக்கூப் அவர்களும், கம்பம் டைனிபார்க் கிட்ஸ் பிளே ஸ்கூலின் தாளாளர் மஹசபின் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.*

*சமூக நல்லிணக்க பேரவை கௌரவ தலைவர் ஹபிபுல்லாஹ், வெல்ஃபேர் கட்சியின் மாவட்ட தலைவர் முகமது சபி உள்ளிட்ட பெரியோர்கள் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி மகிழ்தனர்.*




*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி பொறுப்பாளர் பரிதா அவர்களின் நன்றியுரையோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.*

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறிமுகக் கூட்டம்

*கிராமப்புற ஜமாஅத் நிர்வாகிகளுக்கான ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் அறிமுகம் கூட்டம்*

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் இஸ்லாமிக் சென்டர் மதுரை கீழ் இயங்கக்கூடிய*

- ★ *மதுரை*
- ★ *ராமநாதபுரம்*
- ★ *விருதுநகர்*
- ★ *தேனி*

*ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற பள்ளிவாசல் தலைவர் மற்றும் செயளாலருக்கான*
*ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்து அறிமுக கூட்டம் கடந்த 21.1.2025 செவ்வாய்க்கிழமை திருச்சியில் காலை 11.00 மணி முதல் மதியம் 2.30 மணி வரை நடைபெற்றது*

*இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் மாநில தலைவர் மௌலவி ஹனிபா மன்பஈ அவர்களும், ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் மாநில துணைத்தலைவர் ஐ. ஜலாலுதீன் அவர்களும், ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் மாநில செயலாளர் மௌலவி முகைதீன் குட்டி உமரி அவர்களும், மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச் செயளாலர் ஜனாப்; நஜீர் ஹுஸைன்*

அவர்களும் கலந்து கொண்டனர்.

இச்சிறப்பு நிகழ்ச்சியின் நோக்கம் 1980 களில் தமிழகத்தில் குறிப்பாக தென் மாநிலங்களில்
★ மதுரை
★ இராமநாதபுரம்
★ விருதுநகர்
★ தேனி

ஆகிய மாவட்டங்களில் இஸ்லாமிய மார்க்கத்தால் ஈர்க்கப்பட்டு தங்களுடைய வாழ்க்கை நெறியை இஸ்லாமாக மாற்றிக் கொண்ட மக்களுக்காக உருவாக்கப்பட்டதுதான் வேலூர் இஸ்லாமிக் சென்டர்.
★ இஸ்லாமிய கல்வி
★ அவர்களின் குழந்தைகளுக்கு உலக கல்வி
★ கிராமங்களை கண்காணிப்பதற்கும்
★ வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல
★ திருமணம்
★ வாழ்வின் அனைத்து நிலைகளிலும் துணையாக நிற்பது போன்ற காரியங்களுக்கு கிளையாக உருவாக்கப்பட்டதுதான் மதுரை இஸ்லாமிக் சென்டர்.

இந்நிலையில் நான்கு மாவட்டங்களில் உள்ள சுமார் 16 கிராமங்களில் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் பணிகளை முழு வீச்சாக எடுத்துச் சொல்ல வேண்டும் அதற்கு அந்தந்த ஜமாத் பொறுப்பாளர்களிடத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பணிகளையும் அதன் முக்கியத்துவத்தை முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறும் வகையிலும் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இனி நேரடியாக அதன் பணிகளை கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படும். கடந்த மூன்றாண்டுக்கு மேலாக கிராமப்புறங்களில் அனைத்து நிகழ்ச்சிகளும் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் பெயரில் நடைபெற்று வருகிறது.

இருந்தாலும் உள்ளூர் ஜமாஅத்தின் பங்களிப்பும் அவர்களுடைய அர்ப்பணிப்போடு இனி வரக்கூடிய காலங்களில் நடைபெற வேண்டும். அதை உணர்த்தும் விதமாக உள்ளூர் ஜமாஅத்தின் பொறுப்பாளர்களுக்கு இச்சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநிலத் தலைவர் மௌலவி ஹனிபா மன்பஈ அவர்கள் உரை நிகழ்த்தும்போது...
நன்றிக்கு நன்றி என்பது மனித வாழ்வில் யதார்த்தமாக கடைபிடிக்கக் கூடிய ஒரு விஷயம் பல அழகான உவமானங்களைக் கொண்டு மனித

*வாழ்வில் நாம் செலுத்தக்கூடிய நன்றிகளை நினைபடுத்தினார்*

*உதாரணத்திற்கு... கிராமப்புறங்களில் ஒரு திருமண வைபோகம் நடந்தால் நாம் அன்பளிப்பு (மொய்) என்கின்ற அடிப்படையில் பணம் கொடுப்போம். அதற்கு அவர்களும் திருப்பி செய்வார்கள். குறைவாக செய்ய மாட்டார்கள் அதைவிட நிறைவாக செய்வார்கள் வீட்டில் நடைபெறக்கூடிய காரியங்களுக்கு அன்பளிப்பாக நாம் ஒரு மூக்குத்தி வாங்கி கொடுத்தால் அதேபோன்று செய்வார்கள் அல்லது அதைவிட அதிகமாக செய்வார்கள். குறைவாக செய்ய மாட்டார்கள்.*

*நாம் வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் பொழுது வழியில் ஒருவர் நம்மை நிறுத்தி உதவி கேட்கின்ற போது நாம் அதை அவருக்கு செய்தால் திரும்ப மற்றொரு தருணத்தில் நாம் நடந்து செல்லும் பொழுது நம்மிடத்தில் உதவி பெற்றவர் நம் அருகில் வந்து உரிமையாக வண்டியில் ஏறுங்கள் என்று நாம் கேட்காமலே நமக்கு உதவி செய்வார்.*

*நன்றிக்கு நன்றி இப்படி மனித வாழ்வில் பல நன்றிகளை நாம் செலுத்திக் கொண்டே இருக்கின்றோம் ஆனால் இறைவன் நமக்கு இஸ்லாம் என்கின்ற அருட்கொடையை, நேர்வழியை, பொக்கிஷத்தை, அருளை நமக்கு வழங்கி இருக்கின்றான். நாம் அதை அடைந்திருக்கின்றோம் அதற்கு நாம் என்ன நன்றி செலுத்தி இருக்கிறோம் வெறுமனே தொழுகை நோன்பு இவைகள் செய்தால் அது இறைவனுக்கு நன்றி செலுத்தக்கூடிய வகையாகுமா ? இல்லை! நாம் நேர்வழி அடைந்த பிறகு நம்மை ஒரு முஸ்லிம் என்று வெளிப்படுத்தக்கூடிய காரியங்கள் அவை. ஆனால்! இறைவன் நமக்கு நேர்வழி காட்டினானே அதேபோல நமக்கு கிடைத்த நேர்வழி மற்றவர்களுக்கு நம்மால் நாம் காட்டுவது தான் நன்றிக்கு நன்றி செலுத்துவது ஆகும். கிராமத்தில் இருக்கக்கூடிய பொறுப்பாளர்கள் நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்றால் உங்களுடைய கிராமங்களில் இருக்கக்கூடிய மற்றவர்களுக்கு இந்த மார்க்கத்தை இந்த அருட்கொடையை இந்த அருளை நீங்கள் எடுத்துரைத்து அவர்களுக்கு நீங்கள் சேர்க்க வேண்டும் என்று அழகான முறையில் தங்களுடைய உரையில் குறிப்பிட்டார்.*

*அதேபோல மாநில துணைத்தலைவர் ஜனாப்: ஐ. ஜலாலுதீன் அவர்கள் இந்தியாவில் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் துவங்கப்பட்ட கால முதல் தற்போது வரை நடைபெற்ற பணிகளை பவர்பாயிண்ட் மூலம் எடுத்துரைத்தார்.*

- ★ *ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் கொள்கை, கோட்பாடுகள்*
- ★ *வழிமுறைகள்*

★ நடைபெற்று வரும் பணிகள்
★ உறுப்பினர், ஊழியர்களுக்கு தரப்படக்கூடிய பயிற்சிகள்
★ பொது சேவைகள்

அனைத்து விஷயங்களையும் மிக அழகிய முறையிலே விளக்கினார். அது மட்டுமல்ல ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய அளவில் செயல்பட்டு வரும்



★ நிறுவனங்கள்
★ பள்ளிக்கூடங்கள்
★ மருத்துவமனைகள்
★ வட்டி இல்லா நிதியங்கள்
★ ஆசிரியர் குழு
★ சட்ட நிபுணர்கள் குழு
★ சமூகத்தில் ஒன்று இணைக்க கூடிய குழு

இப்படி இந்தியாவில் எந்தெந்த துறைகள் எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கிறதோ அத்தனையும் மிக தெளிவான முறையில் புரிந்து கொள்ளும் வகையில் அவர்கள் விளக்கம் அளித்தார்கள்.

நிகழ்ச்சியின் முன்னதாக மாநில செயலாளர் மற்றும் மதுரை இஸ்லாமிக் சென்டர் செயலாளர் மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்கள் இந்நிகழ்ச்சியில் துவக்க உரையாற்றினார்.

இறுதியில் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச்செயலாளரும் மற்றும் மண்டல அமைப்பாளருமான ஜனாப் : நஜீர் உசேன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றியுரை கூறி துவாவோடு நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

வருகை புரிந்த அனைவருக்கும் மதிய விருந்து ஏற்பாடு செய்து மன மகிழ்வோடு அனைவரும் கலைந்து சென்றனர்.



## மஹல்லா மாநாடு

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், பாலக்கரை வட்டத்தின் சார்பில் ‘இறைவனின் மேன்மையைப் பிரகடனப்படுத்துவீராக!’ (அல்குர்ஆன்-74:3) என்ற

*மையக்கருத்தில் மஹல்லா மாநாடு 19.01.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 7 மணி முதல் 9 மணி வரை திருச்சி முதலியார்சத்திரம் KMS ஹக்கீம் அரங்கில் நடைபெற்றது.*

*ஜனாப்.காதர் மீரா அவர்கள் இறைமறை வசனங்களை ஓதி மாநாட்டை துவங்கி வைத்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருச்சி ஆலோசனைக் குழு உறுப்பினர், முனைவர். அப்துர் ரஜாக் அனைவரையும் வரவேற்று ஜமாஅத் பணிகளை விவரித்து துவக்கவுரை நிகழ்த்தினார்.*

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருச்சி கிளை தலைவர் ஜனாப். ஹஜ் மொய்தீன் மஹல்லா மாநாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தலைமையுரை ஆற்றினார்.*

*ஜனாப். அஜீஸ் லுத்ஃபுல்லாஹ் (மொழிப்பெயர்ப்பாளர் & மாநிலச் செயலளார்- ஆராய்ச்சி & நூலாக்கம், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்- தமிழ்நாடு & புதுச்சேரி) அவர்கள் மாநாட்டின் மையக்கருத்தில் சிறப்புரையாற்றினார்.*

*அவர் பேசுகையில், சிந்தனை, செயல். கொடுக்கல் வாங்கல், பேச்சு, நடத்தை என வாழ்க்கையின் பல்வேறு தளங்களிலும் இறைவனின் மேன்மையை பிரகடனப்படுத்துபவராக நாம் எவ்வாறு திகழ வேண்டும் எனும் கருத்துக்களை முத்தாய்ப்பாய் எடுத்துரைத்தார்.*




*அவ்வாறு திகழும்போது, நம்முடைய வாழ்வில் ஏற்படும் மறுமலர்ச்சிகளை எடுத்துக் கூறினார்.*

*அதைத் தொடர்ந்து, ஜனாப். A.P. அப்துல் நாசர் (கதீப், மஸ்ஜிதுல் ஹுதா & மாவட்ட அழைப்புப்பணி பொறுப்பாளர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்- பாலக்காடு, கேரளா) அவர்கள் மாநாட்டின் மையக்கருத்த்தில் சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில், ஒவ்வொரு தனிநபரின் வாழ்க்கையிலும், நடைமுறையிலும் எப்படிப்பட்ட மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் இறைவனின் மேன்மையை பிரகடனப்படுத்தும் இறைநம்பிக்கையாளராக உருவாக முடியும் என்பதை சீறாவின் ஒளியில், பல்வேறு நபர்களின் அன்றாட வாழ்வின் நடைமுறை உதாரணங்களோடு விளக்கினார்.*
*நிறைவாக, சகோ. அ. உமர் பாரூக் நன்றியுரையாற்றினார். நிகழ்வை*

முனைவர். சலாஹுதீன் மற்றும் சகோ. தவ்ஃபிக் சிறப்பாக தொகுத்து வழங்கினர். இம்மாநாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள், பெரியோர்கள், பள்ளி நிர்வாகிகள், இமாம்கள், பிரமுகர்கள், முஸ்லிம் அமைப்பினர் என பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர். சிந்தனையைத் தூண்டும் இஸ்லாமிய நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.




மேலும் அனைவருக்கும் சுவையான இரவு உணவு வழங்கப்பட்டது.பாலக்கரை வட்ட ஊழியர்கள் மாநாட்டு ஏற்பாடுகளை வெகுச் சிறப்பாக செய்திருந்தனர். கடந்த இரு மாதங்களாக திட்டமிட்டு மாநாட்டு செய்தியைத் தொடர்ந்து மக்களிடம் பரவலாக கொண்டு சேர்த்தனர்.

## தேசிய பெண் குழந்தை தினம்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர் வட்டம் சார்பாக ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 ஆம் தேதியில் தேசிய பெண் குழந்தை தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

குறிப்பாக , பெண்களுக்கு எதிராக நடக்கக்கூடிய பாதிப்புகளையும் அதிலிருந்து எப்படி மீள்வது போன்ற விவகாரங்களை கிராமப்புறங்களில் உள்ள அனைத்து பகுதிகளிலுமே சந்தித்து விழிப்புணர்வு செய்யப்படுகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இது 2008 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது, இது இந்திய சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

- ★ பெண் குழந்தைகளை காப்பாற்றுதல் ,
- ★ குழந்தை பாலின விகிதங்கள் மற்றும்
- ★ பெண் குழந்தைகளுக்கான ஆரோக்கியமான மற்றும்
- ★ பாதுகாப்பான சூழலை உருவாக்குதல்

பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்கள் உட்பட பல நிகழ்ச்சிகளுடன் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

அவ்வகையில் நமது கிராமப்புறங்களில்
★ பெண் குழந்தைகளுக்கு தேவையான அறிவுரைகள்
★ பாதுகாப்பு முறைகள்
★ ஒழுக்க விழுமங்கள்
★ தன்னம்பிக்கை
★ எதிர்கால திட்டம்
★ ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளுதல்



போன்ற செய்திகளை பெண் குழந்தைகளிடத்தில் எடுத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருக்கிறோம் இச்சிறப்பு நிகழ்ச்சி தற்போது

★ இராமநாதபுரம், ★மக்கா நகரில் ஊழியரும் இமாமுமான ஆலிம் முஹம்மது ஜாஃபர்★ அவர்களும்
★ மதுரை, ★காண்டையில் ஊழியரும் இமாமுமான மௌலவி அப்துல் மாலிக் ஸலாமி★ அவர்களும்.
★ தேனி , ★கோடாங்கி பட்டியில் உறுப்பினரும் இமாமுமான ஆலிம் அபுபக்கர் தஃவதி★ ஆகியோர் தலைமையில் அந்தந்த பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு சென்று தலைமை ஆசிரியர் இடத்தில் இந்நாளின் அவசியத்தை எடுத்துக் கூறி பெண் குழந்தைகளிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டது. உடனே தலைமை ஆசிரியர்கள் இந்த நல்ல கருத்துக்களை நீங்களே குழந்தைகளுக்கு கூறுங்கள் என்று குழந்தைகளை ஒருங்கிணைக்க வைத்து அந்த குழந்தைகள் மத்தியிலே பேசப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி தேசிய பெண் குழந்தை தினத்தின் நோக்கத்தை அதிலிருந்து பெறவேண்டிய செய்திகளை அழகிய முறையில் எடுத்துரைக்கப்பட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

## அல்லாஹ்வின் உதவியாளர்களாக திகழுங்கள்

இந்த நிகழ்ச்சியில் நகர தலைவர் ஜனாப் சிபகத்துல்லாஹ் தலைமை வகித்தார். ஜனாப் முஸ்தாக் அஹ்மத் வரவேற்புரை ஆற்றினார்.

மௌலவி இஸ்மாயில் ஃபலாஹி திருக்குர்ஆன் விரிவுரை ஆற்றினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல பொறுப்பாளர் ஜனாப் அப்துல் ஹமீத் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். ஜனாப் அஸ்ரப்



அலி நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியை ஜனாப் இப்ராஹிம் வழி நடத்தினார்.

நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட சகோதரர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டு நிறைவு பெற்றது.

## குடியரசு தின விழா சிறப்பு நிகழ்ச்சிகள்

குடியரசு தின விழா சிறப்பு நிகழ்ச்சிகள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர் வட்டம் சார்பாக ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 26 ஆம் தேதி குடியரசு தினத்தை கொண்டாடப்பட்டு வருகின்றது.
மக்கள் கருத்தை மாற்றி அமைக்கக்கூடிய எந்த ஒரு நிகழ்வையும் தவறவிடாமல் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. அப்படி இந்த குடியரசு தின விழாவையும் கையில் எடுத்து நடத்தப்படுகின்றது.

பல கிராமங்களில் பள்ளிவாசல்களில் கொடி ஏற்றி ஊர் மக்களை அழைத்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்வதும், இன்னும் பல ஊர்களில் அரசு பள்ளிக்கூடங்களில் நடைபெறக்கூடிய குடியரசு தின விழாவில் பங்கெடுத்து உரைகள் நிகழ்த்துவதும், இன்னும் சில ஊர்களில் பள்ளிவாசலிலும் ஜமாத்தார்கள் கொடியேற்றி அந்த ஊரில் உள்ள அரசு பள்ளிக்கூடத்திலும் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி ஊரார் மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த 2025 ம் ஆண்டும் குடியரசு தின நிகழ்ச்சி மிகச் சிறப்பாக கிராமப் புறங்களில் நடைபெற்றது.

1. மக்கா நகர் பள்ளிவாசலில் ஜமாத் தலைவர் கொடியேற்றி ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் jih- ஊழியரும் மக்கா நகர் பள்ளிவாசலின் இமாமுமான ஆலிம் முஹம்மது ஜாஃபர் தாவதி அவர்கள் குடியரசு தின உரை நிகழ்த்தினார். குடியரசு தின விழாவில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள் மத்தியிலும் ஊரார் மத்தியிலும் ஒற்றுமையை வலியுறுத்தி வரை நிகழ்த்தினார் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற நிலைக்கு ஏற்றார் போல் இந்த நாட்டில் வாழக்கூடிய அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் அந்த ஒற்றுமை தான் இந்த நாட்டை வலுப்படுத்தும் நாட்டு மக்களை வளமாக இருக்க வைக்கும் நாம் ஒன்றுபடுவோம் ஒன்றாக செயல்படுவோம் நல்ல கருத்துக்களை

மக்களிடத்திலே பதிவு செய்வோம் போன்ற செய்திகளை மக்கள் மத்தியில் எடுத்துரைத்தார். மேலும் , மதரஸா மாணவ மாணவிகளும் உரை நிகழ்த்தினார்கள்.

2. தீன் நகர் பள்ளிவாசலில் குடியரசு தின அன்று தேசிய கொடியை ஜமாத் தலைவர் அவர்கள் ஏற்றி பள்ளிவாசலினுடைய இமாமும் jih- ஊழியருமான மௌலவி ஜாபர் சாதிக் மன்பஈ அவர்கள் உரை நிகழ்த்தினார். இந்த நாட்டில் வாழக்கூடிய மக்கள் அனைவர்களும் ஜாதி மத வேறுபாடு இன்றி இன மொழி வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் சமம் என்கின்ற நிலையில் தங்களை உருவாக்கிக் கொண்டு வாழ வேண்டும் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்கின்ற சொல்லாடலுக்கு ஏற்ப இந்தியாவில் வாழுகின்ற அனைவரும் ஒற்றுமையாக இருக்கும் பட்சத்தில் நாடு செழிக்கும் நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக வளமாக வாழ்வார்கள் போன்ற சமூக ஒற்றுமைக்கான கருத்துக்களை அவர்கள் கூறினார். மேலும் மக்தப் மதரஸா மாணவ மாணவிகள் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

3. அதேபோன்று ரமலான் நகரில் அரசு பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் jih- ஊழியரும் பள்ளிவாசல் இமாமான மௌலவி சம்சுதீன் பைஜி அவர்கள் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார்.

4. அதே போன்று ஓடைகுளம் பகுதியில் அரசு பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் jih- ஊழியரும் ஓடை குளம் பள்ளிவாசலில் இமாமும் அவர்களும் அவர் தலைமையில் உள்ளூர் ஜமாத்தார்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்வில் பங்கெடுத்து மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார்.

5. அதேபோல காண்டை கிராமத்தில் உள்ளூரில் உள்ள பள்ளிக்கூடத்தில் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் jih- ஊழியரும் ஜும்மா பள்ளிவாசல் இமாமான மௌலவி அப்துல் மாலிக் ஸலாமி அவர்களை சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு சிறப்புரை நிகழ்த்துமாறு கூறினார். அவரும் குடியரசு தின விழாவில் கலந்துகொண்டு நாட்டுப்பற்றையும் மாணவ மாணவிகளிடத்தில் இருக்கவேண்டிய நீதி, நியாயம், ஒழுக்கம், வேறுபாட்டில்லாத மனம், நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல எண்ணங்கள் இவைகள் மாணவர் மத்தியிலே உருவாக வேண்டும் என்று தங்களுடைய உரையிலே எடுத்துக் கூறினார். குடியரசு தின விழா மிக சிறப்பாக நடைபெற்றது.

7. அதேபோன்று குராயூரில் உள்ள அரசு பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும்

குராயூர் ஜும்மா பள்ளிவாசல் இமாமான மௌலவி அப்துல் கரீம் இனாமி அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி உரை நிகழ்த்தினார் மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. அவர் உரையில் நற்குணங்கள், உதவி மனப்பான்மை, நல்லொழுக்கம், இவைகள் பிள்ளைகளிடத்தில் இருக்க வேண்டும் என்கின்று உரையில் குறிப்பிட்டார். மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

8. அதேபோல அணைக்கரைப்பட்டி கிராமத்தில் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் அணைக்கரைப்பட்டி பள்ளிவாசல் இமாமான சர்தார் பாஷா அவர்கள் உள்ளூரில் உள்ள பள்ளிக்கூடத்தில் கலந்து கொண்டு மாணவ மாணவிகளிடத்தில் குடியரசு தின உரை நிகழ்த்தினார்.மாணவ மாணவிகள் மத்தியில் ஒற்றுமை பாகுபாடற்ற மனநிலை விட்டுக் கொடுக்கக்கூடிய குணம் சகோதரத்துவ வாஞ்சையோடு பழகக்கூடிய எண்ணம் போன்ற குணங்கள் மிளிர வேண்டும் அதுதான் சமூகத்தினுடைய வலிமை என்று அவர் கூறினார். மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

9. அதேபோன்று ஊராம் பட்டியில் உள்ளூரில் உள்ள பள்ளிக்கூடத்தில் குடியரசு தின விழாவில் கலந்துகொண்டு ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் ஊராம் பட்டி ஜும்மா பள்ளிவாசல் இமாமான அக்பர் இக்பால் அவர்கள் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கியதோடு நல் உபதேசமும் அவர்களுக்கு செய்யப்பட்டது. மாணவ மாணவிகள் மத்தியில் ஒற்றுமையும் பாசமும்நேசமும் பாகுபாடற்ற சகோதரத்துவ எண்ணங்களும் ஒன்றுக்கொன்று உதவக்கூடிய குண நலங்களும் இருக்க வேண்டும் என்று அவர் அந்த உரையில் குறிப்பிட்டார்கள்

10. அதேபோன்று கோடாங்கி பட்டி ஊரில் உள்ளூர் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் கோடாங்கி பட்டி ஜும்மா பள்ளிவாசல் இமாமான ஆலிம் அபூபக்கர் தாவூதி அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு கலந்து கொண்டு குடியரசு தின உரை நிகழ்த்தினார். அவர் உரையில் இந்திய நாட்டின் வலிமை மாணவர் மத்தியில்தான் இருக்கின்றது இந்த மாணவ சக்திகள் உருவாகின்ற பொழுது தேசத்துக்காகவும் நாட்டிற்காகவும் மாநிலத்துக்காகவும் நலம் நாடக்கூடியவர்களாக உருவாக வேண்டும்.தன்னலமற்ற உழைக்கக்கூடிய குணமும், ஒழுக்க விழுமங்களோடு உருவாக வேண்டும் அவரிடத்தில் நல்ல பழக்கங்கள் இருக்க வேண்டும் போட்டி பொறாமை குரோதமான எண்ணங்கள் மோசடித்தனம் இவைகள் அற்ற மாணவ மாணவிகளாக உருவாக வேண்டும். நேர்மை வாய்மை ஒழுக்கம் நீதி சகோதரத்துவ



வாஞ்சையோடு பழகக்கூடிய குணம் போன்றவர்கள் மிளிர வேண்டும் என்று அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டு மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இப்படி இன்னும் பல கிராமங்களில் ஆங்காங்கே இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் நமது ஊழியர்கள், உறுப்பினர்கள் பங்கெடுத்து மக்கள் கருத்தை சாதகமாக மாற்றக்கூடிய அந்த குறிக்கோளை தேவைக்கேற்ப மக்கள் மத்தியில் பணிகள் நடைபெற்று வருகிறது.

## மாணவச் செல்வங்களுக்கான பல்வேறு விளையாட்டு ஒலிம்பிக் நிகழ்ச்சிகள் மதுரை.

மதுரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரைமகளிரணி சார்பாக CIO OLIMPICS விளையாட்டுப்போட்டிகள் புதூர் அல் அமீன் மேல்நிலைப் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை 02/02/2025 நடைபெற்றது. Running race, Basket with ball, Bottle filling, Balloon walking, CIO Olimbic RALLY ஆகியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

ஜமாஅத்தே இஸ்லாமி மதுரைக் கிளையின் உறுப்பினர்கள், ஊழியர்கள், அபிமானிகள், GIO, SIO, Solidarity மற்றும் தன்னார்வலர்கள் ஒருங்கிணைந்து விளையாட்டு போட்டிகளை நடத்தினார்கள் பரிசளிப்பு நிகழ்ச்சியை CIO மாணவிகள் அஸ்ரா, சஃபியா கிராஅத் ஓதி துவக்கி வைத்தனர் மதுரை அமீரே மகாமி மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்கள் தலைமையுரையாற்றினார்கள் மற்றும் அல் அமீன் பள்ளியின் correspondent வாழ்த்துரையாற்றினார்கள். Correspondent அவர்களுக்கு மௌலவி நூஹ் மஹ்ளரியின் வாழ்வும், வரலாறும் புத்தகம் நினைவுப்பரிசாக வழங்கப்பட்டது. மதுரை CIO பொறுப்பாளர் சகோதரி நூர் நிஷா அவர்கள் CIO அறிமுக உரையாற்றினார்கள். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கேடயமும்,சான்றிதழும் வழங்கப்பட்டது.

பங்கேற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் CIO Olimpic சான்றிதழ் வழங்கப்பட்டது.

அல்ஹம்துலில்லாஹ் 320 மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள். சகோதர சமுதாயத்தை சேர்ந்த குழந்தைகளும் கலந்து கொண்டது மகிழ்ச்சியாக இருந்தது 200 பெற்றோர்கள் கலந்துகொண்டு

*குழந்தைகளை ஆர்வமூட்டினார்கள்.*

*உதயதாரகை டெஸ்க் வைத்து உதயதாரகை பற்றி அறிமுகம் செய்யப்பட்டது 30பேர் சந்தா கட்டுகிறோம் என்று கூறியுள்ளார்கள். 2பேர் உடனே சந்தா கட்டியுள்ளார்கள். நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற கிருபை செய்த அல்லாஹு த ஆலாவுக்கே எல்லாப்புகழும், நன்றியும்.*






## குடும்ப நல ஆலோசனை

*குடும்ப நல ஆலோசனை வழங்குபவர்களுக்கான சிறப்பு தொடர் பயிற்சி வகுப்புகள் தமிழக அளவில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தி வருகிறது.*

*இப்பயிற்சி வகுப்புகளில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர்கள் தமிழகமெங்கும் இருந்து கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர்.*




*அதனொரு பகுதியாக கோவையில் இன்றும், நாளையும் (8, 9 பிப்ரவரி 2025) என இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வின் ஆரம்பமாக ஜமாஅத் தமிழ்நாடு அமீரே ஹல்கா மௌலவி. முஹம்மது ஹனீஃபா மன்பஈ அவர்கள் தலைமையுரையாற்றி வருகிறார்.*

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி CIO ஒலிம்பிக் மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டு போட்டிகள்.

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக CIO ஒலிம்பிக் 9/2/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 1 மணி வரை கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டுத் திடல் (Stadium) CIO ஒலிம்பிக் மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டு*

போட்டிகள் மிக சிறப்பாக நடைபெற்றது.
இந்த நிகழ்ச்சியில் 50 M running,100 M running,Water filling,Potato gathering race, Matching colour,Lemon and spoon,Bursting balloon ஆகிய போட்டிகள் நடைபெற்றது.




நகர தலைவர் ஜனாப் சிபகத்துல்லாஹ் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக CIOவின் மாநில செயலாளர் உருது பிரிவு ஜனாப் அஹமத் அன்சர் அவர்கள் குழந்தைகளை இளம் பருவத்திலேயே இஸ்லாமிய அச்சில் வார்த்தெடுக்கவும் அதற்கான சூழல் உருவாக்கி தருவது நம் கடமையும் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி அஹலே சுன்னத் ஜமாத் டவுன் கமிட்டி தலைவர் ஜனாப் இர்ஃபானுல்லாஹ் ஹுசைனி தொழிலதிபர் ஜனாப் நவாஸ் பாஷா, நூர் மஸ்ஜித் தலைவர் ஜனாப் குப்தார் அஹமத், ஷாஹி மஸ்ஜித் துணைத் தலைவர் ஜனாப் பாரூக் அஹ்மத், இஸ்லாமிய பைத்துல்மால் தலைவர் வழக்கறிஞர் ஜனாப் லியாகத் அலிகான் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் 130 மேற்பட்ட மாணவ மாணவிகள் போட்டியில் பங்கு பெற்றனர். மேலும் 100 மேற்பட்ட பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




இந்த நிகழ்ச்சியை JIH உறுப்பினர்கள், ஊழியர்கள், மகளிர் அணியினர் ஆகியோர் மிக சிறப்பாக ஏற்பாடுகள் செய்து நடத்தி நிறைவு செய்தனர்.

## பெரியார் ஓர் பார்வை

கும்பகோணம் சத்தியச் சோலை சார்பாக 11.02.2025 மாலை 6.30 மணிக்கு சத்தியச் சோலை உள் அரங்கில் "பெரியார் ஓர் பார்வை கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைப்பெற்றது.



நிகழ்ச்சிக்கு சிறப்பு பேச்சளாராக எழுத்தாளர் கடையநல்லூர் S.A. செய்து இப்ராஹீம் அவர்கள் தொடக்க உரையாற்றி கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் 60க்கு மேலான சமுதய சகோதர்கள் கலந்து கொண்டனர்.

ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்களின் தலைமயில் நடைப்பெற்றது. நிகழ்ச்சியை வழி நடத்தியவர் மாவட்ட அமைப்பாளர் ஜனாப். முகம்மது யூனுஸ் அவர்கள் வழிநடத்தினார்.



எழுத்தாளர் S.A. செய்யது இப்ராஹீம் அவர்கள் இந்த வார சமரசம் இதழில் பெரியார் ஓர் பார்வை என்றதலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்.

## ரமலானே வருக
## பெண்களுக்கான சிறப்பு பயான் நிகழ்ச்சி

ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை கிழக்கு மண்டலத்தின் திருமறை நகர் வட்டத்தின் ரமளானே வருக. எனும் பெண்களுக்கான சிறப்பு பயான் நிகழ்ச்சியில்

ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் ஜனாப். M.சலீம் அவர்கள் ரமளானில் திட்டமிட வேண்டிய செயல்பாடுகளைக் குறித்து மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

சகோதரி ரஃபியா அவர்களின் கிராஅத்துடன் துவங்கிய நிகழ்வில் திருமறை நகர் வட்ட பொறுப்பாளர் சகோ. மெஹர்நிஷா. அவர்கள் தலைமையுரையாற்றினார்கள்.

மக்ரிப் தொழுகளைக்குப் பின், கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் கீழ்வரும் தலைப்புகளில் கருத்துரை வழங்கப்பட்டது.
இரவுத் தொழுகை - சகோ. கதீஜா
குர்ஆன் -சகோ. பர்வீன்
ஜகாத் - சகோ. ஷிஃபானா



பாவமன்னிப்பு - சகோ. ஷக்கிலா சகோ. பரிதா அனைவரையும் வரவேற்க சகோ. தஸ்லீமா. அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

கிழக்கு மண்டல நாஜிமா சகோதரி அஸ்மாபீ அவர்கள் நிறைவுரையோடு நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது. நிகழ்வில் சுமார் 275 சகோதரிகள் கலந்து கொண்டனர்.

## ரமலானே வருக!

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை ஆண்கள் வட்டம் சார்பாக ரமலானே வருக நிகழ்ச்சி 16.02.25 ஞாயிற்றுகிழமை காலை 11:00 மணிக்கு முனிச்சாலை JIH அலுவலகத்தில் நடைபெற்றது.

மதுரை மகாமி அமீர் மௌலவி முஹைதீன் உமரி அவர்கள்,

1.ரமலான் மாதத்தின் சிறப்புகள்

2.அம்மாதத்தில் கிடைக்கும் எண்ணிலடங்கா நன்மைகள்.

3.இறைவனால் வழங்கப்படும் அருள்,

4.அவனது கருணையால் கிடைக்கும் பெரும் மன்னிப்பு

5.ரமலான் மாதத்தில் தவிர விடா தருணங்கள், துஆக்கள், அதனால் கிடைக்கும்

6.தூய்மை குணம் மற்றும் ஆன்மா பலம்.

அதன் வீச்சுகள் குறித்து சிறப்பாக எடுத்துரைத்தார்.

இதில் ஏராளமனா ஆண்கள் பங்கேற்றனர்.பிறகு தேனீர் கலந்துரையடாலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.




## ரமலானே வருக சிறப்பு நிகழ்ச்சி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறந்தாங்கி வட்டத்தில் இன்று ரமலானே வருக சிறப்பு நிகழ்ச்சி மாலை நடைபெற்றது..

இந்நிகழ்ச்சி வழிநடத்தியவர்- சகோதரி ஆ ஃப்ரிதா பர்வீன்.B.sc
குர்ஆன் கிராத்- சகோதரி சாஜிதாபானு அவர்கள்.B.sc

வரவேற்புரை- முபஸ்ஸரா அத்தீஃபா.B.sc
தலைமை உரை- G.சையத் முகம்மது சாகிப் அவர்கள்..
நோன்பின் நோக்கம்- சகோதரி நூருல் ஜெசிமா அவர்கள்..
நோன்பில் கடைபிடிக்க வேண்டிய பண்புகள்- சகோதரி ஜன்னத் அவர்கள்..
நன்றியுரை- முபஸ்ஸராஅத்தீஃபா. அவர்கள்.




அல்ஹம்துலில்லாஹ் இந்நிகழ்ச்சியில் ஆண்கள் 8 பேர் பெண்கள் 62 பேர் கலந்து கொண்டார்கள்.

## மதரஸதுன் தய்யிபா வின் இரண்டாம் ஆண்டு விழா

கடையநல்லூர் ரஹ்மானியாபுரம் மதரஸதுன் தய்யிபா வின் இரண்டாம் ஆண்டுவிழா 16.02.25அன்று ரஹ்மானியாபுரம் ஜமாஅத்தே இஸ்லாமிஹிந்த் அலுவலகத்தில் வைத்து சிறப்புடன் நடைபெற்றது.. ஜமாஅத் ஊழியர் சகோதரி ஷகீலா கிராஅத் ஓதி துவக்கிவைத்தார்.

கடையநல்லூர் ஜமாஅத் தே இஸ்லாமிஹிந்த் அமீரேமகாமி சகோதரர் பீர்முஹம்மது அவர்கள் துவக்க உரை நிகழ்த்த,சிறுவர், சிறுமிகளின் திருக்குர்ஆன் சூராமனனம், துஆக்கள், சிறு உரைகள், இஸ்லாமிய கேள்வி பதில் நிகழ்ச்சியுடன் சிறப்பாக நடைபெற்றது..

மௌலவி அபுல்பரகாத் பைஜி அவர்கள் இஸ்லாமிய வார்ப்பில் குழந்தை வளர்ப்ப என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். போட்டிகளில் பங்கேற்ற குழந்தைகளுக்கு அமீரேமகாமி பரிசளித்து குழந்தைகளைப் பாராட்டினார்கள். சிறுவர், சிறுமிகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள், சகோதரி ஆயிஷா இனிதே நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். சகோதரி அல்லி நன்றி கூறினார்.



## சிறப்பு நிகழ்ச்சி

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் பச்சப்பட்டி பெண்கள் வட்டம் சார்பாக ரமலானே வருக என்ற சிறப்புப் நிகழ்ச்சி 16-2-2025 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3 முதல் 5 வரை அர்ரஹ்மான் மக்தப் மதரஸாவில் நடைபெற்றது.*

*சிறப்புரை: ஜனாப் : முஹம்மது ரியாஸ்*
*மாவட்டத் தலைவர்.சாலிடாரிட்டி,தஞ்சை*
*தலைப்பு: ரமலானும் நாமும்*



*ஜனாப்: ஜாபர் சாதிக்*
*மாவட்டத் தலைவர். சாலிடாரிட்டி, சேலம்*
*தலைப்பு: குர்ஆனும் நாமும்*

*இந்நிகழ்ச்சியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர் அல்ஹம்துலில்லாஹ்.*

## மதரஸா ஆண்டு விழா

*திருப்பூர் நூருல் ஹுதா மக்தப் 13 ம் ஆண்டு விழா 16.02.2025 ஞாயிறு மாலை சரியா 4 மணிமுதல் இரவு 10 வரை நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு மஸ்ஜிதுல் ஹுதா முத்தவல்லி A.முஹம்மது காசிம் அவர்கள் தலைமை வகித்தார்.அல்ஹுதா வெல்ஃபேர் டிரஸ்ட்(AWT)*
*பொதுச்செயலாளர் S.சாகுல் ஹமீது அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.*

*50 வது வார்டு கவுன்சிலர் பெனாசிர் நிஷா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.*

*மௌலவி A.முஹம்மது இக்பால் யூசுபி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.*

*நூருல் ஹுதா மக்தப் மதரஸாவில் பயின்று வரும் 85 மாணவ மாணவிகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் குர்ஆன் மனனம்,ஹதீஸ் மனனம்,துஆக்கள்,பேச்சுப்போட்டி,வினாடி வினா போட்டி,பாங்கு சொல்லுதல்,பட்டிமன்றம் என்று பல்வேறு நிகழ்வுகளை பெற்றோர்களுக்கு முன்னால் நிகழ்த்திக் காண்பித்தார்கள். போட்டிகளில் பங்கெடுத்த அனைத்து மாணவ&மாணவிகளுக்கும் பல்வேறு வகையான பரிசுகள்,கேடயம், நினைவு பரிசுகள்,*



*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்(JIH) மகளிர் அணி,SIO, solidarity பொறுப்பாளர்கள் மூலமாக வழங்கப்பட்டன.*

*ஆண்டு விழா நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஐடியல் டியூசன் சென்டர் ஆசிரியை சகோதரி T.பெனாசிர் நிஷா அவர்கள் சிறப்பாக வழி நடத்தினார்.*

*இறுதியாக அல்ஹுதா அறக்கட்டளை உறுப்பினர் வி.சுஹைப் அவர்களின் நன்றியுரையுடன் ஆண்டு விழா நிகழ்வு இறைவனின் அருளால் சிறப்பாக நிறைவுற்றது. ஆண்டு விழாவில் 200க்கும் மேற்பட்ட மாணவ & மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.*

## ரமலானே வருக!

*ரமலானை வருக சிறப்பு நிகழ்ச்சி கடந்த 16.2 2025 அன்று ஞாயிற்றுக்கிழமை 6:30 மகரிப் தொழுகை பிறகு கோட்டை யேந்தலில் ரமலானை வருக சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் ஓடை குளம் பள்ளிவாசலின் இமாமான மௌலவி ஆதம் அலி பைஜி அவர்கள் கலந்து கொண்டார்கள்.*

*இந்நிகழ்ச்சியை கோட்டை யேந்தல் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.*

*இந்த நிகழ்ச்சியை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் கோட்டை யேந்தல் ஜும்மா பள்ளிவாசலின் இமாமான ஆலிம் அப்துல் ரகுமான் தாவதி அவர்கள் ஏற்பாடு செய்து சிறப்பாக வழி நடத்தினார்.*

*சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி , ஆதம் அலி பைஜி அவர்கள் ரமலானை வருக என்கின்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார் அவர் கூறுகையில் ரமலானை வருக என்ற நிகழ்ச்சி இந்நிகழ்ச்சிக்கு பிறகு தான் மனித குலத்துக்கு ரமலான் வருவது தெரியும் என்பது அல்ல! மாறாக இந்த ரமலானில்*

*★ நாம் என்ன செய்ய வேண்டும்*

*★ இந்த ரமலானில் நம்முடைய செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும்*

*★ இந்த ரமலானில் நம்முடைய எதிர்பார்ப்புகள் எப்படி இருக்க வேண்டும்*

*★ இந்த ரமலானில் நன்மைகளால் நாம் எதை பெற வேண்டும்*




போன்ற விஷயங்களை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். ரமலான் மாதங்களில் முஸ்லிம்கள் முழுக்க முழுக்க இபாதத்துகளிலும், நற்காரியங்களிலும் ஈடுபட வேண்டும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவர் ஒருவர் நன்மை எதிர் பார்த்து ரமலானில் நோன்பு வைக்கின்றாரோ அவர் நாளை மறுமையில் பாவங்கள் மன்னிக்கப்பட்டவராக இறைவன் அவரை சந்திப்பான். ரமலானில் நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலும் இறைவனால் பொரிந்திக் கொள்ளக்கூடிய செயலாக இருக்கின்றது. நாம் செய்கின்ற செயல் அது எவைகளாக இருந்தாலும் சரி நாம் அதை மன ஓர்மையோடு இறைவன் புறத்தில் கூலி எதிர்பார்த்ததை எண்ணத்தோடு நாம் ரமலானில் பயணித்தோம் என்றால் நாம் செய்கின்ற எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அது நமக்கு சுவனத்துக்கான நன்மையாக மாறும் என்பது எந்த சந்தேகமும் இல்லை. என்பதை மேற்கோள் காட்டி பல செய்திகளை அவர் தங்களுடைய உரைகளில் சுட்டிக்காட்டினார்.

நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கோட்டை யேந்தல் ஜமாத்தில் உள்ள அனைத்து ஆண்கள் பெண்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியாக நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த அனைவருக்கும் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு துஆ உடன் நிறைவடைந்தது.

## இஸ்லாமிக் சென்டர்(ICM) ஊழியர் வட்டத்தின் சார்பாக ரமலானே வருக! சிறப்பு நிகழ்ச்சி

ரமலானை வருக! சிறப்பு நிகழ்ச்சி JIH-ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த், இஸ்லாமிக் சென்டர்(ICM) ஊழியர் வட்டத்தின் சார்பாக விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகில் உள்ள ஊராம் பட்டியில் 16.2.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணி முதல் லுகர் தொழுகை வரை நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும், ராமநாதபுரம் மாவட்டம் சிக்கல் பகுதியில் உள்ள மதினா நகர் பள்ளிவாசலின் இமாம் ஆகிய ஆலிம் முஹம்மது ரபிக் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியை ஊராம் பட்டி ஜமாத் தலைவர் தலைமையேற்று நடத்தி வைத்தார். ஊராம் பட்டி பள்ளிவாசல் இமாமும், ஜமாஅத் இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரான ஆலிம் அக்பர் இக்பால் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து சிறப்பாக வழிநடத்தி கொடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றுவதற்காக வருகை புரிந்த ஆலிம் முஹம்மது ரபிக் அவர்கள் அவர்களின் உரையில் இவ்வாறு கூறினார்
ரமலானை ஏன் வரவேற்க வேண்டும் ?
ரமலானே வருக நிகழ்ச்சி எதற்கு ?
நம் வீடுகளில் முக்கிய நிகழ்வு நடக்க இருப்பதாக இருந்தால் நம்மளுடைய எண்ணமும் சிந்தனையும் எப்படி இருக்கும் என்பதை ஒரு நிமிடம் கற்பனை செய்து பாருங்கள் எந்த நிகழ்வோ அந்த நிகழ்வை குறித்து முழுமையாக தெரிந்து கொள்வோம் அந்த நிகழ்வில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்வோம் அதற்கான அனைத்து தேவைகளுமே திட்டமிடுவோம் இறுதியாக அது சிறப்பாக நடைபெறுவதற்காக நம் உடலையும் உள்ளத்தையும் பொருளாதாரத்தையும் தயார்படுத்துவோம் பிறகு அந்த நிகழ்விலே நாம் அடி எடுத்து வைப்போம்.

எடுத்துக்காட்டாக :
திருமணம் : நம்முடைய வீட்டில் திருமணம் நடக்கின்றது எனில் அந்த திருமணத்திற்கு எத்தனை மாதங்களுக்கு முன்பாக திருமண ஏற்பாடுகளை செய்வோம் !
அல்லது நம்முடைய வீடுகளில் மற்ற விசேஷங்கள் நடக்கின்றன என்றால் அதற்கு நாம் எத்தனை நாட்களுக்கு முன்பாக வேலைகளை ஆரம்பம் செய்வோம் !

வீடு கட்டுவது :
வீடு கட்ட ஆரம்பிக்கின்றோம் எனில் அந்த வீடு கட்டுவதற்கு முன்கூட்டியே நாம் என்ன என்ன தீர்மானங்கள் எடுப்போம் !

ரமலானே வருக! நிகழ்ச்சி:
அதே போலத்தான் வர இருக்கும் ரமலான் மாதமும் ! மனதால் , உள்ளத்தால் , உடலால் நாம் தயாராக வேண்டும்.

இதன் முக்கியத்துவம்:
முக்கிய நாட்களில் தள்ளுபடி போல ; பெரிய பெரிய நிறுவனங்கள்
- ★ ரம்ஜான் தள்ளுபடி
- ★ பக்ரீத் தள்ளுபடி
- ★ தீபாவளி தள்ளுபடி
- ★ பொங்கல் தள்ளுபடி
- ★ புத்தாண்டு தள்ளுபடி

போன்ற விசேஷ நாட்களில் கிடைக்க கூடிய சலுகை மற்ற நாட்களில் கிடைக்காது.! அதே போலத்தான் ரமலான் மாதங்களில் கிடைக்க கூடிய நன்மை மற்ற மாதங்களில் கிடைக்காது.! ரமலான் மாதத்தில்

*நாம் செய்யக்கூடிய அமல்களுக்கு ஒன்றுக்கு பத்தல்ல ஒன்றுக்கு 700 மடங்கு அளவுக்கு நன்மை கிடைக்க தயாராகிய மாதத்தை பயன்படுத்தி*
*நம்மையை அல்லிச்செல்லக் கூடிய வர்களாக நாம் மாறவேண்டும் .*

*அது எப்படி?*
*1. முதலில் 30 நாட்களும் நோன்பு வைக்க நிய்யத் செய்வோம்*
*2. இரவு நேரத் தொழுகைகளை பேணுதலாக கடைப்பிடிப்போம்*
*3. குர்ஆனை அதிகம் அதிகமாக ஓதுவோம்*
*4. முடிந்தவரை குர்ஆனை முழுமையாக படித்து முடிப்போம்*
*5. இறை தியானம் பிரார்த்தனையில் அதிகமாக ஈடுபடுவோம்*
*6. பொய்யான அருவெருக்கத்தக்க செயல்களில் இருந்து விலகி வாழ்வோம்*
*7. மனித குல அமைதிக்காக பிரார்த்தனை செய்வோம்*
*8. கடைசி பத்து நோன்புகளில் ஓய்வு எடுக்காமல் ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவை தேட பாடுபடுவோம்*
*9. கடைசி பத்து நோன்புகளில் இஃதிகாப் இருக்க முயற்சி செய்வோம்*
*10. அதிகமதிகம் தர்மம் செய்வோம்*
*11. ஸகர் உணவு இல்லாதவர்களுக்கு ஸஹர் ஏற்பாடு செய்வோம்*
*12. இப்தார் நேரங்களில் நோன்பாளிகளுக்கு நோன்பு திறக்க ஏற்பாடு செய்வோம் .*



*இன்னும், இப்படி ரமலான் மாதத்தில் இருக்கக்கூடிய சிறிய காரியமாக இருந்தாலும் சரி, பெரிய காரியமாக இருந்தாலும் சரி, அவைகளை முறையாக முறைப்படுத்தி அமல்கள் செய்கின்ற பொழுது அல்லாஹுத்தஆலா இதற்கு வெகுமதியாக சுவனத்தை வழங்குவதாக வாக்களித்து இருக்கின்றான் என்று அவர் தன் உரையில் கூறினார்.*

## ரமலானே வருக! சிறப்பு நிகழ்ச்சி

*மதுரை மாவட்டம் காண்டை பகுதியில் கடந்த 17.2.2025 திங்கள்கிழமை மாலை 6:30 மணி முதல் எட்டு முப்பது மணி வரை காண்டை ஜும்மா பள்ளிவாசலில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.*

*சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் ராமநாதபுரம் தீன் நகர் ஜும்மா பள்ளிவாசலின் இமாமான*

மௌலவி ஜாபர் சாதிக் மன்பஈ அவர்கள் கலந்து கொண்டார்கள். ரமலானே வருக சிறப்பு நிகழ்ச்சிக்கு காண்டை முஸ்லீம் ஜமாத் தலைவர் ஜனாப், அப்துல் மஜீத் அவர்கள் தலைமை தாங்கினார்,

இச்சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அழகுற வழிநடத்தி அமைத்து தந்த ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் காண்டை ஜும்மா பள்ளிவாசலில் இமாமான மௌலவி அப்துல் மாலிக் ஸலாமி அவர்கள் வழி நடத்திக் கொடுத்தார்கள்.

ரமலானே வருக! சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்புரையாற்றிய மவுலவி ஜாபர் சாதிக் மன்பஈ அவர்கள் தங்களின் உரையில் கூறுகின்ற பொழுது... ரமலானே வருக என்ற இந்த மாபெரும் அருள் நிறைந்த மாதத்தை நாம் அடைய இருக்கின்றோம் இந்த மாதம் நமக்கு தரக்கூடிய செய்தியும் பயிற்சியும் நாளை மறுமையில் நம்மை சுவனவாதியாக மாற்றக் கூடிய மாபெரும் பாக்கியம் நிறைந்த மாதமாக இருக்கிறது.

அந்த பாக்கியம் நிறைந்த மாதத்தை நாம் உணர்ந்து அதில் இருக்கக்கூடிய ஒவ்வொரு அமல்களையும் செயல்களையும் நாம் மனதிருப்தியோடு இறைவனிடத்தில் கூலி பெறக்கூடிய எண்ணத்தோடு நாம் அணுக வேண்டும்.

இந்த மாதம் எப்படிப்பட்ட மாதமாக இருக்கிறது என்று சொன்னால் ஒரு நோன்பாளிக்கு நாம் நோன்பு திறக்க உதவி செய்தால் ஒரு நோன்பாளி நாள் முழுவதும் நோன்பு வைத்து எந்த நன்மையை சம்பாதிப்பாரோ நோன்பு திறக்க வைப்பதால் அதே கூலியை அல்லாஹுத்தஆலா நமக்கும் தருகிறான் என்றால் நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் இந்த ரமலானில் அல்லாஹுத்தஆலா எவ்வளவு அருள் வளங்களை வைத்திருக்கிறான் என்று!

★ நாம் பேசுகின்ற பேச்சால்
★ நாம் கொடுக்கின்ற உதவியாள்
★ அடுத்தவர் மீது காட்டக்கூடிய அன்பால்
★ அரவணைப்பால்

நாம் எண்ணிப் பார்க்க முடியாத, எண்ணிலடங்க முடியாத நற்கூலியை அல்லாஹுத்தஆலா இந்த மாதத்தில் தருவதற்கு தயாராக இருக்கிறான்.

ஆகவே வர இருக்கின்ற

★ அருள் வளமும் பர்க்கத்தும் நிறைந்த இந்த மாதத்தை நாம் முழுமையாக அடைய வேண்டும்.



★ அதில் நாம் நோன்பு நோற்க வேண்டும்.
★ நற்காரியங்களில் ஈடுபட வேண்டும்
★ இறைவன் தரப்பிலிருந்து தரக்கூடிய கூலியை முழுமையாக பெற வேண்டும். என்கின்ற செய்தியை மிக அழகிய முறையில் எடுத்துரைத்தார். காண்டை ஜமாஅத்தில் உள்ள ஆண்கள், பெண்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## ரமளானே வருக சிறப்பு நிகழ்ச்சி

ஓசூர் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் ரமளானே வருக சிறப்பு நிகழ்ச்சி நேற்று 21.2.25 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. மௌலானா முஹம்மது சிராஜ் நத்வி அவர்கள் குர்ஆன் கிராஅத் ஓதினார். அதை முஹம்மது ஆரிப் தமிழாக்கம் செய்தார்.




நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் ஜாஹிர் உசேன் வரவேற்றார்.
ஓசூர் நகர பொறுப்பாளர் முஹம்மது ஆரிப் தலைமை ஏற்று நடத்தினார்.

மௌலவி இஸ்மாயில் பலாஹி அவர்கள் வட்டி என்ற சமூகத் தீமை தீர ஜகாத் அவசியம் என்பதை உணர்த்தினார்.
அடுத்து சிறப்புரை ஆற்றிய டாக்டர் முஹையுதீன் அவர்கள் ரமளான் மாதம் ஏன் சிறப்பு வாய்ந்தது என்று கேள்வி எழுப்பி அதை இறையச்சம் என்ற புள்ளியில் இணைத்து இந்த இறையச்சம் ரமளான் மாதத்தில் மட்டும் தானா என்று கேள்வி எழுப்பி அனைவரையும் சிந்திக்க வைத்தார். மேலும் இந்த ரமளான் மாதம் அனைவரும் குர்ஆனில் உள்ள இறையச்சம் தொடர்பான வசனங்களை தொகுத்து ஆய்வு செய்து பார்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

முஹம்மது ஆரிப் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் ஆண்கள் பெண்கள் என சுமார் 80 பேர் கலந்து கொண்டனர்.

## ரமளானே வருக சிறப்பு நிகழ்ச்சி

*அஸ்ஸலாமு அலைக்கும். ஓசூர் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் ரமளானே வருக சிறப்பு நிகழ்ச்சி நேற்று 21.2.25 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.*

*மௌலானா முஹம்மது சிராஜ் நத்வி அவர்கள் குர்ஆன் கிராஅத் ஓதினார். அதை முஹம்மது ஆரிப் தமிழாக்கம் செய்தார்.*

*நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் ஜாஹிர் உசேன் வரவேற்றார். ஓசூர் நகர பொறுப்பாளர் முஹம்மது ஆரிப் தலைமை ஏற்று நடத்தினார்.*




*மௌலவி இஸ்மாயில் பலாஹி அவர்கள் வட்டி என்ற சமூகத் தீமை தீர ஜகாத் அவசியம் என்பதை உணர்த்தினார்.*
*அடுத்து சிறப்புரை ஆற்றிய டாக்டர் முஹையுதீன் அவர்கள் ரமளான் மாதம் ஏன் சிறப்பு வாய்ந்தது என்று கேள்வி எழுப்பி அதை இறையச்சம் என்ற புள்ளியில் இணைத்து இந்த இறையச்சம் ரமளான் மாதத்தில் மட்டும் தானா என்று கேள்வி எழுப்பி அனைவரையும் சிந்திக்க வைத்தார். மேலும் இந்த ரமளான் மாதம் அனைவரும் குர்ஆனில் உள்ள இறையச்சம் தொடர்பான வசனங்களை தொகுத்து ஆய்வு செய்து பார்க்குமாறு கேட்டுக் கொண்டார். முஹம்மது ஆரிப் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் ஆண்கள் பெண்கள் என சுமார் 80 பேர் கலந்து கொண்டனர்.*

## ரமலானே வருக ! சிறப்பு நிகழ்ச்சி

*அணைக்கரைப்பட்டி ஜும்மா பள்ளிவாசலில் 18 2 2025 செவ்வாய்க்கிழமை மாலை 6:30 முதல் 8:30 வரை நடைபெற்றது. இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ராமநாதபுரம் ரமலான் நகர் ஜும்மா பள்ளிவாசலின் இமாமும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியருமான மௌலவி சம்சுதீன் பைஜி அவர்கள் வருகை தந்தார். மேலும் இந்நிகழ்ச்சிக்கு அணைக்கரைப்பட்டி ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.*

அணைக்கரைப்பட்டி ஜும்மா பள்ளிவாசலின் இமாமும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினருமான ஆலிம் சர்தார் பாஷா அவர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து வழிநடத்தி அமைத்து தந்தார்.

அணைக்கரை பட்டியில் நடந்த ரமலானே வருக நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மவுலவி சம்சுதீன் பைஜி அவர்கள் தங்களின் உரையில் கூறுகையில், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமலானை குறித்தும் ரமலானில் கடைபிடிக்கக் கூடிய அமல்களை குறித்தும் பல அறிவிப்புகளையும், வழிகாட்டுதலையும் நமக்கு தந்திருக்கிறார்கள்.

ரமலானே வருக! என்ற இந்த நிகழ்ச்சியின் மூலமாக வெறுமனே அவைகளை நினைவூட்டுவது நோக்கம் அல்ல மாறாக நாம் அடையப் போகின்ற ரமலான் மாதத்தில் முறையாக திட்டமிட்டு அமல்கள் செய்து நன்மைகளை பெற வேண்டும் பெறுவதற்கான தூண்டுகோலாக அமைய வேண்டும் என்பதற்காகவே இந்த ரமலானை வருக நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

ரமலானை பொறுத்த வரைக்கும் அல்லாஹ் ஒவ்வொரு செயல்களிலும் பல நன்மைகளை நமக்கு வைத்திருக்கின்றான் உணவு உண்பதில் இருந்து நோன்பு திறக்க கூடிய அந்த நேரம் வரைக்கும் ஒவ்வொரு செயலுக்கும் அல்லாஹுத்தஆலா பன்மடங்கான நற்கூலியை தர காத்துக் கொண்டிருக்கிறான்.

நாம் உண்ணுகின்ற சகர் உணவு இருக்கிறதே! அதில் அல்லாஹ் சுபஹானஹுதஆலா பரக்கத்தை வழங்கி இருக்கின்றான். வெறுமனே பசி எடுக்காத ஒரு நிலை மட்டுமல்ல மாறாக அந்த உணவால் நம்முடைய

★ உடல் ஆரோக்கியம் பெறுகிறது
★ மன வலிமை பெறுகிறது
★ ஈமான் பெறுகிறது




மற்ற நாட்களில் ஒருவேளை உணவு உண்ணவில்லை என்றால் மனிதனுடைய உடல் செயலாற்றதாக, செயல்பட மறுக்கக்கூடிய நிலை உருவாகின்றது. ஆனால் இறைவனுடைய அருளை பாருங்கள் அதிகாலை நான்கு மணிக்கு ஸஹருடைய உணவு உண்டு விட்டு நீர் அருந்தாமல் மற்ற பானங்கள் அருந்தாமல் வெறுமனே இறைவனை பயந்து நாம் நோன்பு

பிடிக்கின்ற அந்த காலம் மாலை வரை எந்தவிதமான மயக்கமோ, கிறக்கமோ எதுவுமே இல்லாமல் எப்படி தெம்பு கிடைக்கிறது! எங்கிருந்து வலிமை வருகிறது!
இது அல்லாஹ்வின் புறத்திலிருந்து வருகிறது.
அதனால் தான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீங்கள் ஸஹர் உணவை உண்ணுங்கள் அதில் பர்க்கத் இருக்கிறது என்று. அல்லாஹுத்தஆலா வைத்திருக்கக் கூடிய இந்த நியமத்தை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த சமூகத்துக்கு நினைவூட்டி, இந்த சமூகத்திற்கு ஆர்வமூட்டினார்கள். இப்படி ஒவ்வொரு அமல்களையும் தங்களுடைய உரைகளில் மேற்கோள் காட்டி ரமலானில் நாம் செய்ய வேண்டிய அமல்களை அழகுற நினைவூட்டி சிறப்பாக உரை நிகழ்த்தினார். இறுதியாக துஆவுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

## ரமலானே வருக ! சிறப்பு நிகழ்ச்சி

இராமநாதபுரம் ரமலான் நகரில் 22.2.2025 சனிக்கிழமை மாலை ஆறு முப்பது முதல் எட்டு முப்பது மணி வரை நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில செயலாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் செயலாளருமான மௌலவி முஹையீதீன் குட்டி உமரி அவர்களும் மற்றும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச் செயலாளருமான ஜனாப் நஜீர் ஹுசைன் அவர்களும் மற்றும் ராமநாதபுரம் ஜமாத்துல் உலமா சபை வட்டார தலைவர் மௌலவி முஹம்மது ரபீக் உலவி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்கள் தங்களுடைய உரையிலே கூறுகையில் ரமலானே வருக நிகழ்ச்சி என்பது ஒரு நினைவூட்டல். எப்படியான நினைவூட்டல் என்றால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ரமலான் வருகின்ற பொழுது தங்கள் குடும்பத்தையும் உறவுகளையும் சமூகத்தையும் நினைவூட்டி தயார்படுத்தினார்கள். அருளவலமிக்க, மகத்துவமிக்க மாதம் வர இருக்கின்ற நிலையில் இந்த மாதத்தை யாரும் தவற விட்டு விடக்கூடாது.

இம்மாதத்தில் இருக்கின்ற அனைத்து இபாதத்துகளையும் செய்து இறைவனிடத்தில் கூலியை பெற வேண்டும் என்று கூறினார்.

மேலும், கூறுகையில் இஸ்லாமிய சமூகம் செய்கின்ற ஒரு தவறு அல்லது மறதி என்னவென்றால் ? ஒரு மாத காலம் நோன்பு இருந்து பெருநாள் பிறை தென்பட்ட உடனே மக்கள் எல்லாம் பள்ளியை விட்டும் கடைவீதிக்கு ஓடி செல்கின்றார்கள். கைசேதம்! அன்று இரவு தான் ஒரு மாத காலம் நோன்பு இருந்தவர்களுக்கான கூலி தரப்படுகின்றது என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள். ஒரு மாத காலம் நோன்பு நோற்று கூலியை பெறக்கூடிய சிந்தனையே இல்லாமல் மக்கள் பெருநாளுக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்காக பள்ளியில் அமர்ந்து அல்லாஹ்விடத்தில் கூலியை பெற்று செல்லாமல் விரண்டோடுவதை பார்க்கின்ற பொழுது கை சேதம், மக்களுடைய பரிதாப நிலை நமக்குத் தெரிகிறது.

ஆகவே இந்த ஆண்டு அப்படியான நிலை வந்து விடக்கூடாது
★ நாம் 30 நாள் நோன்புகள் நோற்று
★ அந்த இரவில் நாம் அல்லாஹ்விடத்தில் கூலியை பெற்று
★ பாவமன்னிப்பை பெற்று
★ அவனை அருளை பெற்று
★ விடிய காலையில் பெருநாள் கொண்டாட கூடிய மக்களாக இருக்க வேண்டும் என்று அவர் உரையில் குறிப்பிட்டார். இராமநாதபுரம் ஜமாத்துல் உலமா சபை வட்டார தலைவர் மௌலவி முஹம்மது ரபீக் உலவி அவர்கள் தங்களுடைய உரையில் கூறுகின்ற பொழுது ரமலான் என்றாலே அது குர்ஆனோடு அதிகமான தொடர்புடையது. ரமலானில் நாம் அதிக அதிகமாக குர்ஆனை ஓத வேண்டும். பொருள் உணர்ந்து ஓத வேண்டும். ஓதுகின்ற வசனத்தை நம்முடைய வாழ்வில் கடைபிடிக்க வேண்டும்.

எந்த அளவுக்கு என்றால் நாளை மறுமையில் அல்லாஹ்வை சந்திக்கின்ற பொழுது நாம் ஓதுகின்ற இந்த குர்ஆன் நமக்கான பரிந்துரையாக மாற வேண்டும் என்று அவர் தங்களுடைய உரையில் கூறினார்.

சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த விருந்தினர்களுக்கு பொன்னாடை போற்றி ஜமாத்தின் சார்பாக கௌரவிக்கப்பட்டது.

ரமலான் நகர் ஜமாத்தார்கள் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், இளைஞர்கள், சங்கத்தார்கள் என 250 க்கும் மேற்பட்ட மக்கள் திரளாக கலந்து கொண்டார்கள். இறுதியாக துஆ வுடன் நிகழ்வு நிறைவடைந்தது.



## இல்லம் தோறும் திருக்குர்ஆன் சிறப்பு நிகழ்ச்சி

*இல்லந் தோறும் திருக்குர்ஆன் சிறப்பு நிகழ்ச்சி இராமநாதபுரம் மக்கா நகரில் 22 2.2025 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 6:30 மணி வரை நடைபெற்றது.*

*இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில செயலாளரும் மதுரை இஸ்லாமிய சென்டர் செயலாளருமான மௌலவி முஹைய்தீன் குட்டி உமரி அவர்களும்*

*ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச் செயலாளருமான ஜனாப் நஜீர் ஹுசைன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.*

*நிகழ்ச்சியின் நோக்கம் ஒவ்வொரு வீட்டிலும் இறைவேதமான திருக்குர்ஆன் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையில் திருக்குரான் இல்லாத வீடுகளில் திருக்குர்ஆன் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அவ்வகையில் ராமநாதபுரம் மக்கா நகரில் உள்ள 42 குடும்பத்திற்கும் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு வழங்குவது என முடிவு செய்து IFT குர்ஆனை 22.2.2025 சனிக்கிழமை மாலை இல்லம் தோறும் திருக்குர்ஆன் எனும் சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அனைவருக்கும் குர்ஆன் வழங்கப்பட்டது.*

*நடைபெற்றது சிறப்பு நிகழ்ச்சிக்கு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி முகைதீன் குட்டி உமரி அவர்கள் தங்கள் உரையில் கூறுகையில் குர்ஆன் தான் மனிதனை மனிதனாக வாழ வைக்கக்கூடிய வழிகாட்டி.*

*குர்ஆன் தான் இறைவனோடு நம்மை நெருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாதனம். அதிலும் ரமலான் மாதம் வர இருக்கின்ற இந்த நேரத்தில் திருக்குர்ஆனோடு ஒவ்வொரு முஸ்லிமும் தங்களை அதிகமான தொடர்பு வைத்துக்கொண்டு அதன் கருத்துகளை உள்வாங்கி வாழ்வில் மிளிர வேண்டும். குர்ஆனோடு இருக்கும் காலமெல்லாம் எந்த ஒரு மனிதனும் வழி தவற மாட்டான் ஆகையால் குர்ஆனோடு நாம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இறை நினைவோடு வாழ வேண்டும் அதற்கு இந்த ரமலானை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.*

*இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று நடத்தித் தந்த ஜனாப் நஜீர் ஹுசைன் அவர்கள் தங்கள் தலைமையுரையில் இவ்வாறு கூறினார்...*

முஸ்லிமுடைய வாழ்வில் இறைவனை நெருங்கிக் கொள்ளக்கூடிய பல அமல்கள் நமக்கு இருக்கின்றன

★ தொழுகையின் மூலமாக நாம் இறைவனின் நெருங்குகின்றோம்

★ நோன்பின் மூலமாக நாம் இறைவனின் நெருங்குகின்றோம்

★ நாம் இந்த உலகில் செய்யக்கூடிய ஒவ்வொரு நற்காரியங்கள் மூலமாக இறைவன் நெருங்கின்றோம்

★ ஆனால் இறைவனோடு பேசக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்றால் அது குர்ஆன் தான்



குர்ஆனை படிக்கின்ற பொழுது நாம் இறைவனோடு பேசிகின்றோம். குர்ஆன் மூலமாக இறைவனும் நம்மோடு பேசுகின்றான். இது எவ்வளவு பெரிய பாக்கியம் இந்த பாக்கியத்தை எந்த ஒரு முஸ்லிமும் இழந்து விடக்கூடாது என்பதற்காக குர்ஆன் இல்லாத ஒவ்வொரு இல்லத்தையும் கண்டறிந்து அந்த இல்லத்தில் குர்ஆனை கொண்டு போய் சேர்க்கக்கூடிய பணியை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். அப்படியான இந்த வாய்ப்பை இப்பொழுது இந்த மக்கா நகரிலும் இறைவனுடைய வேதமான திருக்குர்ஆனை கொண்டு சேர்ப்பதில், அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹுத்தஆலாவுக்கு எல்லா புகழும் புகழ்ச்சியும். இந்த வாய்ப்பை எங்களுக்கு கொடுத்திருக்கின்றான்.

ஆகவே இதை பெற்று நீங்கள் அதன் கருத்தை உள்வாங்கி இறைவன் விரும்பக்கூடிய மனிதனாக வாழ்ந்து இறைவன் விரும்பும் சமூகத்தை கட்டமைப்பதற்கு வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் கிருபை செய்வானாக என்று பிரார்த்தனையோடு அவருடைய உரையை முடித்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கு மக்கா நகர் ஜமாத் தலைவர் முன்னிலை வகித்தார் நிர்வாகிகளை கலந்து கொண்டனர் உள்ளூரில் உள்ள 42 குடும்பங்களும் திருக்குர்ஆனை பெற்றனர். நிறைவாக துஆவுடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

## ரமலானே வருக !

*இராமநாதபுரம் மக்கா நகரில் 19.2. 2025 சனிக்கிழமை மாலை 6:30 முதல் இரவு 8 மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் மதினா நகர் ஜும்மா பள்ளிவாசல் இமாமான ஆலிம் முஹம்மது ரஃபீக் தாஃவதி அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு மக்கா நகர் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.*

*இந்நிகழ்ச்சியை மக்கா நகர் ஜும்மா பள்ளிவாசலின் இமாமும் ஜமாத்க இஸ்லாமி ஹிந்த் ஊழியருமான ஆலிம் முஹம்மது ஜாபர் அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அழகுற வழி நடத்தினார்.*

*இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஆலிம் முஹம்மது ரபீக் தாஃவதி அவர்கள் ரமலானே வருக! என்ற தலைப்பிலே உரை நிகழ்த்தினார் அவர் தன் உரையிலே கூறுகின்ற போது ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதம் வருவதும் நாம் அதை கடைபிடிப்பது என்பது சடங்கிற்காக இருக்கக் கூடாது.*

*அது சடங்கிற்காக நம்மிடத்தில் வரவும் இல்லை! நாம் ரமலானை எப்படி அணுக வேண்டும் என்றால் அந்த மாதத்தில் நாம் எடுத்துக் கொள்ளக்கூடிய பயிற்சி என்பது மற்ற மாதங்களில் நம் வாழ்வில் அது பிரதிபலிக்க வேண்டும் ரமலான் என்பது ஒவ்வொரு தனி மனிதனும் நோன்பு நோற்றாலும் கூட அது தனி மனிதனுக்கான இபாதத்துகள் நிறைந்து இருந்தாலும் கூட சமூக மாற்றமும் சமூக ஒற்றுமையையும் சமூகம் முன்னேற்றத்திற்கும் வித்தாக அது அமைந்திருக்கிறது.*

- ★ *ஒவ்வொரு நாளும் தொழுகையில் நாம் ஒன்று கூடுகின்ற பொழுது அதே சிந்தனை தான் இருக்க வேண்டும்*
- ★ *நம்முடைய சமூகத்தினுடைய வளர்ச்சியை*
- ★ *ஒற்றுமையை பறைசாற்ற வேண்டும்*
- ★ *இதற்கான பயிற்சியாக தான் ரமலான் மாதம் வருகிறது*

*நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அப்படித்தானே மக்களை அழைத்தார்கள் மக்களே! இதோ அருள் வளமிக்க மகத்துவமிக்க மாதம் ஒன்று உங்களை வந்து அடைய காத்திருக்கிறது நீங்கள் தயாராகிக் கொள்ளுங்கள்! ஏனெனில் , அந்த மாதத்தில்*

- ★ *நாம் பல நன்மைகள் செய்ய வேண்டும்*
- ★ *நம்முடைய மனங்களை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்*
- ★ *நமது செயல்பாடுகளில் இறைவனுக்கு பிடித்ததாக அமைத்துக் கொள்ள வேண்டும்*
- ★ *ஏழை எளியோருக்கு உதவி செய்ய வேண்டும்*

★ அண்டை வீட்டாரோடு அன்பாக நடந்து கொள்ள வேண்டும்
★ உறவுகளை பேண வேண்டும்
★ தேவை உடையோருக்கு உதவி செய்ய வேண்டும்
★ அதோடு நம்முடைய மறுமைக்காக நாம் தொழுகையில் ஈடுபட வேண்டும்
★ நோன்பு நோற்க வேண்டும்
★ ஜகாத் வழங்க வேண்டும்

இப்படி தனிமனித செயல்பாடாக இருந்தாலும் அது சமூகத்தினுடைய மாற்றமாக இருக்க வேண்டும் உங்கள் பகுதிகள் முன்னேற்றம் வர வேண்டும் என்று சொன்னால் நீங்கள் ஒன்று கூடி அதற்கான முயற்சிகள் எடுக்கும் போது தான் அந்த மாற்றங்கள் வெளிவரும், மாற்றங்கள் நடைபெறும்.

நாம் மாறாத வரை, நம் எண்ணத்தில் அந்த எண்ணம் உதிக்காத வரை எந்த வகையான மாற்றங்களும் தனிப்பட்ட ரீதியிலும் வராது, சமூக ரீதியாக வராது ஆக ரமலானில் நாம் செய்கின்ற அமல்கள் என்பது அது நமக்காகவும் சமூகத்துக்காகவும் சமூக முன்னேற்றத்திற்குரிய செயலாக மாற வேண்டும். என்று இன்னும் உரைகளிலே நோன்பு காலங்களில் இருக்கக்கூடிய செயல்பாட்டின் விளைவாக பெறக்கூடிய நன்மைகளை அவர்கள் தொடர்ந்து பட்டியலிட்டார்.

நோன்பாளி நோன்பு வைத்துக்கொண்டு எப்படி வாழ வேண்டும் என்ற போன்ற செய்திகளை மிக அழக எடுத்துரைத்தார்கள். மக்கா நகர் ஜமாத் ஆண்கள் பெண்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள். துஆ வுடன் இனிதே நிறைவடைந்தது.



## ரமலானே வருக !

சிறப்பு நிகழ்ச்சி இராமநாதபுரம்- முகமதியாபுரம் பகுதியில்20.2. 2025 வியாழக்கிழமை மாலை 6:30 முதல் 8:30 மணி வரை நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச் செயலாளர் ஜனாப்: நஜீர் ஹுசைன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு முகம்மதியாபுரம் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் முகமதியாபுரம் ஜும்மா பள்ளிவாசல்

இமாம் அவர்கள் திருமறை வசனத்தை வாசித்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் கோடாங்கி பட்டி ஜும்மா பள்ளிவாசல் இமாம் ஆலிம் ,அபூபக்கர் தாஃஃவதி அவர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அழகுற வழிநடத்தி தந்தார்.

ரமலானே வருக சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஜனாப் நஜீர் ஹுசைன் அவர்கள் ரமலானே வருக! என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார் அவர் உரையில் கூறுகையில்... ரமலான் மாதத்தை குறித்து நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்கு நினைவூட்டிய வண்ணமே இருந்தார்கள்.

இப்பொழுது நடைபெறுகின்ற இந்த ரமலானே வருக நிகழ்ச்சி என்பது நிர்வாகம் முடிவு செய்யப்பட்டு நடத்தப்படுகின்ற நிகழ்ச்சி அல்ல! நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்களுடைய

★ குடும்பத்தார்களையும்
★ உறவுகளையும்
★ சமூகத்தையும்
★ ஷாபான் மாதத்தில் கடைசி பகுதியில்
★ மக்களுக்கு ஆர்வமூட்டினார்கள்

மனிதர்களே! அருள்வலம் மிக்க மகத்துவமிக்க பரகத் புரிந்த மாதம் ஒன்று உங்களை அடைய காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் அதற்கு தயாராகிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆக இந்த நிகழ்ச்சி என்பது இது சுன்னத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இந்த சமூகத்திற்கு காட்டிக் கொடுக்கப்பட்ட சுன்னத்துகளில் இது ஒரு சுன்னத் ஆக இந்த நிகழ்ச்சியை நீங்கள் இபாதத்தாக பார்க்க வேண்டும்.

இந்த ரமலானில் நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் அல்லாஹுத்தஆலா பல மடங்கு கூலியை தருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறான்.

இவ்வளவு மகத்துவம் வாய்ந்த இந்த மாதத்தை

★ நாம் எப்படி அணுக வேண்டும்
★ இந்த மாதத்திற்கு நாம் எப்படி தயாராக வேண்டும்
★ நம்முடைய உள்ளம்
★ நம்முடைய சிந்தனை எந்த தரத்தில் இருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி அல்லாஹுத்தஆலா இந்த மாதத்தில் பல சிறப்புகள் வைத்திருந்தாலும் நாம் தொழுகின்ற தொழுகை உதாரணத்திற்கு

*எடுத்துக் கொள்ளுங்கள்;*

*★ ஒரு நபில் தொழுதால் சுன்னத் உடைய நன்மை கிடைக்கிறது*

*★ சுன்னத் தொழுதால் பர்ளுடைய நன்மை கிடைக்கிறது.*

*★ ஒரு ஃபர்லை நிறைவேற்றினால் அல்லாஹ் நாடினால் ஒன்றுக்கு 10 லிருந்து 70 . 70 வது லிருந்து 700 வரை நன்மைகள் நமக்கு கிடைக்க இருக்கின்றன*

*★ இந்த மாதத்தில் நாம் தொடுவதெல்லாம் நன்மையாக மாறுகின்றன*

*★ நல்ல எண்ணத்தோடு எண்ணுவது நன்மையாக மாறுகிறது*

*★ நல்ல சிந்தனையோடு பேசுகின்ற பேச்சு நன்மையாக மாறுகின்றன*

*★ கண்ணியமான பார்வை நன்மையாக மாறுகின்றன*

*★ நாம் செய்கின்ற உதவி நன்மையாக மாறுகின்றன*

*ஆக இந்த மாதம் முழுவதும் நன்மைகள் பூத்துக் குலுங்க கூடிய மாதமாக நம்மை வந்து அடைய காத்திருக்கிறது ஆகவே நம்முடைய வாழ்வில் மீண்டும் ஒருமுறை இந்த ரமலான் அடைய இருக்கின்றது.*

*அந்த ரமலானை வரவேற்று அதில் அமல்கள் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டு துஆ திக்ரு போன்ற விஷயங்களில் நம்மை ஆட்படுத்தி அல்லாஹுத்தஆலா நோன்பாளிகளுக்கு என்று தயார்படுத்தி வைத்திருக்கின்ற ரய்யான் என்ற சுவன வாசலில் நாம் நுழைய வேண்டும்.*

*அதற்கு தகுதி உடையவர்களாக மாற வேண்டும் அல்லாஹுத்தஆலா அப்படியான பாக்கியத்தை தர வேண்டும் என்று இன்னும் பல செய்திகளை மிக அழகிய முறையில் அவர்கள் உரையில் எடுத்துரைத்தார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் முகமதியாபுரம் முஸ்லிம் ஜமாத்தார்கள் ஆண்கள் பெண்கள் இளைஞர்கள் மாணவ மாணவிகள் என 100க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வருகை புரிந்த அனைவருக்கும் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சி துஆ உடன் இனிதே நிறைவடைந்தன.*

## ரமலானே வருக!

*இராமநாதபுரம் தீன் நகரில் 19 .2 .2025 புதன்கிழமை மாலை 6:30 முதல் இரவு 8:30 மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில செயலாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் செயலாளருமான மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்களும் மேலும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த்*

மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச் செயலாளருமான ஜனாப்: நஜீர் ஹுஸைன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு சிறப்புரையாற்றிய மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்கள் ரமலானே வருக தலைப்பில் ஆழிய உரை நிகழ்த்தினார் அவர் உரையில் கூறுகையில்... ரமலான் மாதத்தின் சிறப்பே குர்ஆன் தான்! இந்த மாதத்தில் குர்ஆன் இறக்கி அருளப்பட்டதின் விளைவாக அல்லாஹ் சுபஹானஹுதஆலா இந்த மாதத்தை சிறப்பாக்கி வைத்திருக்கிறான். உலகம் துவங்கப்பட்ட காலம் முதல் ஒரு ஆண்டின் மாத எண்ணிக்கை 12 அந்த 12ல் இந்த ரமலான் மாதம் சிறப்பு அடைந்ததின் காரணம் குர்ஆன் இறக்கி அருளப்பட்டது.

இந்த மாதத்தில் முஸ்லிம்களாகிய மக்கள் குர்ஆனோடு நெருங்கிய தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மற்ற காலங்களில் குர்ஆனுக்கும் மக்களுக்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறது அந்த நிலை இந்த ரமலான் மாதத்தில் வந்து விடக்கூடாது ஏனென்றால் குர்ஆனுடைய மகத்துவம் குர்ஆனோடு தொடர்பு வைக்கக்கூடிய மக்களுக்கு கிடைக்கக்கூடிய பர்க்கத், அருள் என்னவென்றால் ? யார் குர்ஆனோடு அதிகமாக இந்த மாதத்தில் தொடர் வைத்திருக்கிறாரோ நாளை மறுமையில் அல்லாஹ் சுபஹானஹுதஆலா இடத்தில் குர்ஆன் பரிந்துரை செய்யும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

குர்ஆன் செய்யும் பரிந்துரை பாருங்கள்...
"யா அல்லாஹ்! நாளை மறுமையில் இவருடைய கணக்கை நீ எழுதுகின்ற பொழுது என்னுடைய பரிந்துரையை நீ ஏற்றுக் கொள்வாயா! ஏனென்றால் ரமலான் காலத்தில் குர்ஆனோடு இவர் அதிகமாக தொடர்பு இருந்தார் என்று குர்ஆன் மனிதனுக்காக பரிந்துரை செய்யும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு சொன்னார்கள் . அது மட்டுமல்ல இந்த மாதத்தில் பல அமல்கள் அருளாக மனித சமூகத்திற்கு வந்திருக்கிறது

★ தொழுகையும் சரி
★ தர்மங்கள்
★ நோன்பாளிகளுக்கு நோன்பு திறக்கக்கூடிய உதவிகள்
★ ஏழை எளியவர் மீது காட்டக்கூடிய கருணை
★ திக்ர்
★ துஆ
★ தராவீஹ் தொழுகை

இப்படி ரமலான் மாதத்தில் இருக்கக்கூடிய அனைத்துமே அருளாக மாறி ஒரு அடியானை சுவனத்துக்குரியவனாக மாற்றுகிறது ஆகவே




இந்த ரமலானை நாம் முழுமையாக திட்டமிட்டு நாம் பயன்படுத்த வேண்டும். அல்லாஹுத்தஆலா இந்த மனித சமூகத்திற்கு வைத்திருக்கக் கூடிய அருளிலே மற்றொன்று

★ லைலத்துல் கதிர் இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவாக அது இருக்கிறது. அதை அடையக்கூடிய பாக்கியத்தை நாம் பெற வேண்டும் என்று அவருடைய உரையில் பல செய்திகளை எடுத்துரைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமையேற்று தலைமை உரையாற்றி ஆற்றினார் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிய சென்று துணைச்செயலாளருமான ஜனாப்; நஜீர் ஹுசைன் அவர்கள். தலைமையுரையில் அவர் கூறுகையில்.. ரமலானே வருக! நிகழ்ச்சி நடத்துவதின் நோக்கம் இந்த நிகழ்ச்சி நடத்துவதினால் தான் இந்த இஸ்லாமிய சமூகத்திற்கு ரமலானை நினைவூட்டுவது அல்ல மாறாக கடந்த ஆண்டில் நம்மோடு பயணித்தவர்கள் இந்த ஆண்டில் இல்லை இந்த ஆண்டில் ரமலானின் பயணிக்க கூடிய பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கி இருக்கிறான் அந்த பாக்கியத்தை நாம் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சி வெறுமனே நினைவூட்டுவது அல்ல

★ நாம் ரமலானில் எப்படியான அமல்களை செய்ய வேண்டும்
★ ஏன் செய்ய வேண்டும்
★ அதற்கான கூலி என்ன

என்பதை அவருடைய தலைமை உரையில் சுட்டிக்காட்டினார். இந்த நிகழ்ச்சியில் தீன் நகர் ஜமாத் தலைவர் ஜனாப்:ஹைதர் அலி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார், நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். தீன் நகர் முஸ்லிம் ஜமாத் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், இளைஞிகள், மாணவ- மாணவிகள் என 200 மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு துஆ வுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## அறிமுக விழா

*Zakat Centre India* அறிமுக விழா நேற்று (24.2.2025, திங்கள்) ஆம்பூரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியச் செயலாளர் ஜனாப் அப்துல் ஜப்பார் சித்தீகி

*சாகிப். மத்திய ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜனாப் H.அப்துர் ரகீப் சாகிப் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஜ.இ.ஹி. வாணியம்பாடி, ஆம்பூர் சகோதரர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.*




## ரமலானே வருக ! சிறப்பு நிகழ்ச்சி

*தேனி மாவட்டம் கோட்டூர் 24 .2 .2025 திங்கட்கிழமை மாலை 6:30 முதல் 8 மணி வரை நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் கோடாங்கிபட்டி ஜும்மா பள்ளிவாசலின் இமாமான ஆலிம் அபூபக்கர் தாஃவதி அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு கோட்டூர் ஜமாத் தலைவர் ஜனாப்; ராஜா முஹம்மது அவர்கள் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியை கோட்டூர் ஜும்மா பள்ளிவாசல் இமாம் மவுலவி ஹபீபுல்லா யூஸுஃபி அவர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அழுகிற வழிநடத்தினார்.*

*சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஆலிம் அபூபக்கர் தாஃவதி அவர்கள் ரமலானே வருக என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அவர் தங்களின் உரையில் கூறுகையில் ரமலானே வருக என்ற நிகழ்ச்சியின் மூலம் தான் இந்த முஸ்லிம் சமூகத்திற்கு ரமலானை குறித்த நினைவூட்டுவது கிடையாது.*

*மாறாக நினைவூட்டுவதும் நோக்கம் அல்ல மாறாக ரமலானில் நாம் எப்படியான அமல்கள் செய்ய வேண்டும் நாம் செய்யப்படக்கூடிய அமலுக்கான நற்கூலி என்ன? அந்த அமலை மனப்பூர்வமாக செய்யாத பொழுது அது எப்படியாக மாறிவிடுகின்றது.*

*ரமலானை அடைந்தும் நற்பெயர் அற்றவர்களாக யார் மாறுவார்? நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமலானை அடைந்து யாருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு நரகத்திலிருந்து விடுதலை பெறவில்லையே அவர் நாசமடையட்டும் என்று யாரை பார்த்து பத்வா செய்தார்கள்? அந்த பத்துவாவிற்கு ஆளாகாமல் நாம் எப்படி இருப்பது? போன்ற செய்திகளை புரிய வைப்பதற்கான நிகழ்ச்சி தான் இவை.*

நம்மளுடைய வாழ்வில் ஒவ்வொரு ஆண்டும் ரமலான் வருகின்றது ரமலானில் நாம் நோன்பு நோற்கின்றோம் பெருநாள் கொண்டாடுகிறோம் அதோடு நாம் ரமலானுக்கும் நமக்கான தொடர்பை துண்டித்து விடுகின்றோம்.

ரமலான் வெறுமனே நம்மை பசியாக வைத்து பெருநாளை கொண்டாட வைத்து செல்வதற்கு வரவில்லை. மாறாக ரமலானில் எடுத்துக் கொள்ளக்கூடிய பயிற்சியை மற்ற 11 மாதங்களில் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ரமலான் மாதம் ஆண்டுதோறும் வந்தடைகின்றது.

அப்படி என்ன நாம் பயிற்சி எடுக்க வேண்டும்?
முதலில் நாம் நன்மைகளை செய்ய வேண்டும்

- ★ ஐவேளை தொழுவது
- ★ ஏழைகளுக்கு தர்மம் செய்வது
- ★ ஃபர்லான நோன்புகளை நோற்பது
- ★ ஜக்காத் வழங்குவது
- ★ நபிலான தொழுகையை அதிகப்படுத்திக் கொள்வது
- ★ சுன்னத்தான காரியங்களில் அதிகமாக ஈடுபடுவது

இப்படி இபாதத்துகள் சார்ந்த விஷயத்தில் நாம் அதிகமாக பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதேபோல தீமையான காரியங்களில் இருந்து விடுபட வேண்டும்

- ★ பொய் பேசுவதில் இருந்து
- ★ புறம் பேசுவதில் இருந்து
- ★ அவதூறு பேசுவதில் இருந்து
- ★ அடுத்தவரை குறித்து தவறாக எண்ணுவதிலிருந்து
- ★ அடுத்தவர் பொருளாதாரத்தை திருடுவதில் இருந்து
- ★ அன்னிய பெண்ணை பார்ப்பதிலிருந்து
- ★ விபச்சாரத்தின் அடி சுவடுகளை கூட தொடாமல் இருந்து

நம்மை தூய்மையாக ஆக்கிக் கொள்வதற்கான பயிற்சி வழங்குவது தான் இந்த ரமலான்.

இந்த மாதத்தில் நாம் எடுக்கின்ற பயிற்சி தான் இன்னபிற 11 மாதங்களில் சின்ன சிறு தவறை கூட செய்யாமல் இறைவனால் மெச்சக்கூடிய, பெருமை கொள்ளக்கூடிய, இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஒரு முன்னோடியான முஸ்லிமாக வாழக்கூடிய பண்பாளராக நாம் மாற வேண்டும். நம்மை மாற்றுவதற்காக தான் ரமலான் ஆண்டுதோறும் வருகிறது என்பதை அவர் உரையில் அழகான முறையில் எடுத்துரைத்தார்.

கோட்டூர் ஜமாத்தார்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர், துஆ வோடு இந்நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## ரமலானே வருக ! சிறப்பு நிகழ்ச்சி

இராமநாதபுரம் வன்னி வயல் 24 .2. 2025 திங்கட்கிழமை மாலை ஆறு முப்பது முதல் இரவு 8:30 மணி வரை நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் மறவாய்குடி ஜும்மா பள்ளிவாசலின் இமாமான ஆலிம் ஷேக் முகமது தாஃவதி அவர்கள் கலந்து கொண்டார்கள். இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு வன்னி வயல் ஜமாஅத் நிர்வாகிகள் முன்னிலை வைத்தனர்.

இந்நிகழ்ச்சியை வன்னி வயல் ஜும்மா பள்ளிவாசல் இமாம் மௌலவி , சாகுல் ஹமீது உலவி அவர்கள் ஏற்பாடு செய்து அழகுற வழிநடத்தினார்.

சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஆலிம் ஷேக் முகமது தாஃவதி அவர்கள் ரமலானே வருக என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அவர் கூறுகையில் ரமலானே வருக! இந்த நிகழ்ச்சி மூலமாக ரமலான் குறித்த செய்திகளை அறிந்து கொள்வதும் ரமலானை குறித்து புரிந்து கொள்வதும் என்பதை கடந்து வரக்கூடிய ரமலானை நாம் எப்படி வரவேற்கப் போகின்றோம், பயன்படுத்த போகின்றோம் என்பதை தெரியப்படுத்துவதற்கும் தெரிந்து கொள்வதற்குமான நிகழ்ச்சிதான் இது.

கடந்த ஆண்டு ரமலானில் நம்மோடு இருந்தவர் இந்த ரமலானே வருக நிகழ்ச்சியில் இருக்கவில்லை என்பது நமக்குத் தெரிகின்றது. அப்படி சூழலில் அல்லாஹுத்தஆலா இந்த ஆண்டு ரமலானை அடையக்கூடிய பாக்கியத்தை நமக்கு நல்கி இருக்கிறான் என்றால் நமக்கு கிடைத்த பெரும் பாக்கியம் என்பதை நாம் கருதி ரமலானில் செய்யக்கூடிய ஒவ்வொரு இபாதத்துகளையும்

- ★ ஐவேளை
- ★ தொழுகை
- ★ நோன்பு
- ★ ஸகாத் கடமையாக இருந்தால் ஜகாத்தை முறையாக வழங்குவது
- ★ சதக்கா செய்வது
- ★ ஃபித்ரா வழங்குவது

இன்னும் எதுவெல்லாம் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நமக்கு காட்டித் தந்திருக்கின்றார்களோ அவைகளை முறையாக முழுமையாக



நாம் செயல்படுத்த வேண்டும். ஏனென்றால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் எத்தனையோ நோன்பாளிகள் நற்பேரற்றவர்களாய் உள்ளனர் அவர்களுக்கு நோன்பின் வாயிலாக பசியும் தாகத்தையும் தவிர வேறு எதுவும் கிடைப்பதில்லை என்று ஹதீஸின் மூலமாக நமக்கு முழுமையாக புரிந்து கொள்ள முடிகிறது.

நாம் வெறுமனே நோன்பு நோற்று இரவில் தராவிஹ் தொழுதால் மட்டுமே சுவனம் கிடைப்பது அல்ல, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவது மட்டும் அல்ல!

நாம் ரமலானில் இஸ்லாம் சொல்லப்பட்ட அனைத்து அமல்களையும் அல்லாஹ்வினுடைய பொருத்தத்தை நாடி செய்கின்ற பொழுது தான் அது நற்கூலியாக மாறும் வெறுமனே சடங்கிற்காக நாம் தொழுதால் நோன்பு வைத்தால் இன்ன பிற அமல்கள் செய்தால் நபிகள் நாயகம் அவர்கள் கூறியது போல நற்பேரற்றவர்களாக மாறக்கூடிய சூழல் ஏற்பட்டு விடும் அந்த நிலை யாருக்கும் வரக்கூடாது என்று இன்னும் பல செய்திகளை மிக அழகான முறையில் எடுத்துரைத்தார்.

இறுதியாக நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த வன்னி வயில் ஜமாத்தார்கள் ஆண்கள் பெண்கள் இளைஞர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ரமலானே வருக ! சிறப்பு நிகழ்ச்சி

இராமநாதபுரம் சிக்கல் பகுதியில் உள்ள ஓடை குளம் பகுதியில் 24. 2.2025 திங்கட்கிழமை மாலை ஆறு முப்பது முதல் எட்டு முப்பது மணி வரை நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச்செயலாளருமான ஜனாப்; நஜீர் ஹுசைன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு ஓடைகுளம் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் ஓடைகுளம் ஜும்மா பள்ளிவாசலின் இமாமான மௌலவி ஆதம் அலி ஃபைஜி அவர்கள் ஏற்பாடு செய்து அழகுற வழி நடத்தினார்.

சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஜனாப் நஜீர் ஹுசைன் அவர்கள் ரமலானே வருக என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார், அவர் உரையில் கூறுகின்ற பொழுது மனித குலத்திற்கு அல்லாஹுத்தஆலா ஒவ்வொரு ஆண்டும் இந்த ரமலானை வழங்குகின்றான். ரமலான் வருவதின் நோக்கம் நன்மைகள் செய்து நற்கூலியை பெற்று இறைவனை அடைவது என்று ஒரு நிலை இருந்தாலும், தன்னைத்தானே அந்த மனிதன் பரிசுத்தவானாக உருவாக்கிக் கொள்வதற்கான பயிற்சியாக இந்த ரமலானை வழங்கி இருக்கின்றான்! இஸ்லாத்தைப் பொறுத்த வரைக்கும் நன்மை சொல்லப்படுவதை போலவே தீமையிலிருந்து விலகி இருப்பதையும் இஸ்லாம் நமக்கு சுட்டிக்காட்டுகின்றது. எப்படி நன்மை ஏவுகின்றோமோ அதே போல் தான் தீமையும் நாம் தடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு மனிதன் அவனுடைய வாழ்வில்

★ பொய் பேசுகின்றான்
★ புறம் பேசுகின்றான்
★ அவதூறு பேசுகின்றான்
★ சூழ்நிலையில் ஏற்படுகின்ற போது திருடுகிறான்
★ தவறான நிலையில் அவன் பயணிக்கின்றான்.
★ மது அருந்துகின்றான்
★ விபச்சாரம் செய்கின்றான்

இப்படி சிறிய பாவத்திலிருந்து பெரிய பாவம் வரை மனிதன் தன் நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைக்காமல் இறைவனுடைய பயம் இல்லாமல் வாழ்கின்ற பொழுது யாராக இருந்தாலும் தவறுகள் செய்வதை இன்றைக்கு கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதில் எந்த ஒரு மதத்தவர்களும் எந்த ஒரு மனிதனும் விதிவிலக்கு அல்ல! எப்பொழுது ஒரு மனிதன் தன்னை தூய்மையானவனாக யோகியவனாக மாற்றிக் கொள்வான் என்றால், அவனுக்கு கடவுள் பக்தி வருகின்ற பொழுது கடவுள் பயம் வருகின்ற பொழுது தவறு செய்வதற்கு அவன் பயப்படுவான்.

கடவுள் பயபக்தியான இந்த நிலை?

★ எந்த கல்லூரியிலும் பயிற்சி அளிக்கப்படாது
★ எந்த பள்ளிக்கூடத்தில் பயிற்சி அளிக்கப்படாது
★ எந்த பாடநூலும் இல்லை

இதற்கு ஒரே நிலை கடவுளை முழுமையாக அவன் நம்பி. கடவுள் என்னை கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து. கடவுளுக்கு அஞ்சி வாழுகின்ற பொழுதுதான் அவன் நல்லதை செய்வான். தீமையில் இருந்து அவன் விலகி இருப்பான் இதைத்தான் இஸ்லாம் ரமலான் மூலம் முஸ்லிம்களுக்கு ஆண்டுதோறும்

*பயிற்சி அளிக்கிறது. உலகத்திலே எங்கேயும் தரப்படாத பயிற்சி இஸ்லாமிய மார்க்கத்தில் ஒவ்வொரு ஆண்டும்*

- ★ *சிறப்பான முகாமாக*
- ★ *மாநாடாக அல்லது*
- ★ *பயிற்சி காலமாக இந்த ரமலானை இறைவன் மனித குலத்திற்கு அருளி இந்த ரமலானில் நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை குர்ஆன் மூலமாகவும் உலகத்திற்கு இறுதியாக வந்த இறுதித்தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூலமாக மனித குலத்துக்கு அல்லாஹ் வழிகாட்டி தந்திருக்கின்றான்.*

*எந்த அளவுக்கு என்றால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொல்கிறார்கள் எவர் நோன்பு நோற்றிருந்தும் பொய் சொல்வதையும் பொய்யான முறையில் செயல்படுவதையும் விட்டுவிடவில்லையோ அவன் பசித்திருப்பதையும் தாகித்திருப்பதையும் பற்றி அல்லாஹ்வுக்கு எந்த அக்கறையும் இல்லை! பாருங்கள் மக்களே! இப்படியான ஒரு அறிவிப்பு வந்த பிறகு நோன்பு இருக்கக்கூடிய எந்த ஒரு மனிதனாவது கவனக்குறைவாக செயல்படுவானா? பொறுப்பற்றவனாக இருப்பானா? அப்படி இருந்தால் அவனுடைய நன்மை அவனுடைய அனைத்து வகையான நற்காரியமும் பாழாகிவிடும் அல்லவா? அப்படியானால்! ஒரு மாதம் முழுவதும் எப்படி தன்னை தூய்மையானவனாக மாற்றிக்கொள்ள பயிற்சி எடுத்துக் கொள்கின்றானோ அந்த பயிற்சியின் விளைவு நோன்பு அல்லாத மற்ற 11 மாதங்களில் அவன் தூய்மையற்ற மனிதனாக இருக்க மாட்டான்.*

*தூய்மையுள்ள மனிதனாக இருப்பதை இறைவன் விரும்பக்கூடிய மனிதனாக அவன் தன்னை உருவாக்கிக் கொள்வான், என்பதற்கான பயிற்சி தான் இந்த மாதம் ஆகவே இந்த மாதத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் தன்னுடைய உரையில் மிக அழகான முறையில் எடுத்துரைத்தார்.*

*இந்நிகழ்ச்சிக்கு ஓடைகுளம் முஸ்லிம் ஜமாத்தார்கள் ஆண்கள் பெண்கள் மாணவ மாணவிகள் இளைஞர்கள் இளைஞர்கள் என திரளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி இறை அருளால் துஆ வுடன் நிறைவடைந்தது.*





## ரமலானே வருக !

*இராமநாதபுரம் சிக்கல் பகுதியில் உள்ள மறவாய்க்குடியில் 23 .2. 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:30 முதல் இரவு எட்டு முப்பது மணி வரை நிகழ்ச்சி நடைபெற்றது.*

*இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணை செயலாளருமான ஜனாப்; நஜீர் ஹுசைன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு மறவாய்குடி ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் மறவாய்க்குடி ஜும்மா பள்ளிவாசலின் இமாமான ஆலிம் ஷேக் முகமது தாஃவதி அவர்கள் வழிநடத்தினார்.*

*இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்துவதற்காக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் மதினா நகர் ஜும்மா பள்ளிவாசலின் இமாமான ஆலிம் முஹம்மது ரபிக் தாஃவதி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.*

*சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஜனாப் நஜீர் ஹுசைன் அவர்கள் ரமலானே வருக! என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அவர் கூறுகையில் ரமலான் மாதத்தில் நாம் பல அமல்கள் செய்கின்றோம் நற்காரியங்களில் ஈடுபடுகின்றோம். அப்படி ஈடுபடுகின்ற பொழுது நம்முடைய எண்ணம் எப்படி இருக்க வேண்டும் என்றால். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியது போல ஒருவன் இறை நம்பிக்கையுடனும் மறுமையில் நற்கூலியை பெறுகின்ற எண்ணத்துடனும்*

★ *நாம் நோன்பு நோற்க வேண்டும்*

★ *நாம் தொழுகையில் ஈடுபட வேண்டும்*

★ *நாம் தர்மம் செய்ய வேண்டும்*

★ *நாம் நன்மையான காரியங்களில் ஒவ்வொன்றாகும் இந்த எண்ணத்தோடு செய்கின்ற பொழுது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். அவர் முன் செய்த பாவங்களை மன்னிக்கப்பட்டவராக அல்லாஹுத்தஆலா அவரை ஆக்குகின்றான் என்று அல்லாஹ்வின் நல்லடியார்களே இது எவ்வளவு பெரிய பாக்கியம் பாருங்கள்! நாம் இந்த உலகத்தில் வாழுகின்ற பொழுது பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாக மறுமையில் அல்லாஹ்வை சந்திக்க வேண்டும் என்று தான் ஒவ்வொரு இறை நம்பிக்கை கொண்ட ஆணும் பெண்ணும் ஆசைப்படுவார்கள். அதற்காகத்தான் நாம் வாழ்நாள் முழுவதும் தொழுகை மற்றும் நற்காரியங்களில் ஈடுபடுகின்றோம் மற்ற நாட்களிலே நம்முடைய தொழுகையும் நற்காரியங்களும் எந்த அளவுக்கு நன்மை கிடைக்கிறது என்பதை நாம் செய்கின்ற செயலை*

வைத்து அது உறுதி செய்யப்படுகிறது.
அதை அல்லாஹுத்தஆலா அப்படியேதான் கணக்கிலும் எடுத்துக் கொள்வான். ஆனால்! பெரும் பாக்கியம் என்னவென்றால்

- ★ ரமலானை ஒரு மனிதன் அடைந்து
- ★ ரமலானிலே நன்மைகளை எதிர்பார்த்தவனாக
- ★ மன்னிப்பை எதிர்பார்த்தவனாக
- ★ நற்கூலிய எதிர்பார்த்தவனாக
- ★ அல்லாஹ்வினுடைய அருளை எதிர்பார்த்தவனாக

இந்த மாதத்தில் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் அல்லாஹுத்தஆலா கணக்கில் இல்லாத நன்மைகளை வழங்குகின்றான். நம்முடைய பாவங்களை மன்னிக்கின்றான். நம்மை இறைவன் பொருந்தி கொள்கிறான்.



இந்த செய்தி எல்லாம் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி தருகின்றது. நம்முடைய வாழ்வில் இப்பொழுது ரமலானை அடையக்கூடிய பாக்கியத்தை அல்லாஹுத்தஆலா வழங்கியிருக்கின்றான். இந்த காலத்தில் நாம் இதை இழந்து விடக்கூடாது. நாம் முழுமையாக நன்மைகளை எதிர்பார்த்தவர்களாக. நாம் அமல்கள் செய்ய வேண்டும் என்று அவர் உரையிலே மிக அழகிய முறையில் அவர் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் மறவாய் குடி ஜமாத்தார்கள் ஆண்கள் பெண்கள் மாணவ மாணவிகள் என்று பெரும் திரளாக கலந்து கொண்டனர். வருகை புரிந்த அனைவருக்கும் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ரமலானே வருக !

மதுரை மாவட்டம் சொக்க நாதன் பட்டியில் 23.2.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு முப்பது முதல் எட்டு முப்பது மணி வரை நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் இராமநாதபுரம் மாவட்டம் ஓடைக்குளம் ஜும்மா பள்ளிவாசலின் இமாமான மௌலவி ஆதம் அலி ஃபைஜி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு சொக்கநாதன் பட்டி தலைவர் அவர்கள் தலைமையேற்று நடத்திக் கொடுத்தார், ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் சொக்கநாதன் பட்டி ஜும்மா பள்ளிவாசலின் இமாமான ஆலிம் ஷாஜஹான் தாஃவதி அவர்கள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அழகுற வழி நடத்தினார்.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி ஆதம் அலி ஃபைஜி அவர்கள் ரமலானே வருக என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார் அவர் கூறுகையில் அல்லாஹுத்தஆலா மனிதர்களுக்கு பல அருள் வளங்களை வழங்கி இருக்கின்றான். அதை மனிதர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹுத்தஆலா மனிதர்களுக்கு வழங்கி இருக்கக்கூடிய அருள் வளங்களிலேயே மிக சிறப்பு வாய்ந்தது இந்த ரமலான் மாதம்! இந்த ரமலான் மாதத்தை ஒருவர் முறையாக அடைந்து அதில் இபாதத் செய்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு நற்காரியங்கள் செய்தால் அல்லாஹுத்தஆலா அந்த மனிதன் எண்ணிப் பார்க்காத அளவிற்கு நன்மைகளை வாரி வழங்குகின்றான்.

காரணம்! ரமலான் மாதம் என்பது நன்மைகள் பூத்துக் குலுங்க கூடிய மாதமாக இருக்கின்றது ரமலான் மாதத்தில் நாம் ஒரு சின்ன ஒரு அமல்கள் செய்தாலும் நாம் எதிர்பார்க்காத அளவுக்கு பெரும் நற்கூலி கிடைக்கின்றது.

நாம் ஒரு நபருக்கு தர்மம் செய்கின்ற பொழுது அந்த தர்மத்தின் தொகை சிறியதாக இருந்தாலும் அல்லாஹ் நாடினால் ஒன்றுக்கு பத்து அல்ல 70 அல்ல 700 வரை நன்மைகளை அல்லாஹுத்தஆலா பெருக்கி தருவதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த சமுதாயத்திற்கு கூறி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மாதத்தை அடைந்திருக்கக்கூடிய நாம் இந்த மாதத்தில் எந்தவிதமான நன்மைகளையும் செய்யாமல் இருந்துவிட்டு நம்முடைய ஆயுள் காலத்தை கழித்து விடக்கூடாது. அடைந்திருக்கக்கூடிய நாம் ஒவ்வொரு நற்காரியங்களையும் அறிந்தும் தெரிந்தும் அதன் மூலமாக



அல்லாஹ் தஆலா தரக்கூடிய வெகுமதியை பெறக்கூடிய பாக்கியத்தை நாம் பெற வேண்டும் என்று அவர் உரையிலே மிக அழகிய முறையில் எடுத்துரைத்தார். நிகழ்ச்சிக்கு சொக்கநாதன் பட்டியில் உள்ள ஜமாத்தார்கள் ஆண்கள் பெண்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

## ரமலானே வருக!

மதுரை மாவட்டம் குரயூரில் 23 .2. 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:30 முதல் இரவு 8 மணி வரை நடைபெற்றது .
இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக விருதுநகர் SIO தலைவர் மௌலவி, அப்துல் ரஹீம் சுஹைப் ஸலாமி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு குராயூர் ஜமாஅத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இச்சிறப்பு நிகழ்ச்சியை குராயூர் ஜும்மா பள்ளிவாசல் இமாமும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியருமான மௌலவி, அப்துல் கரீம் இனாமி அவர்கள் வழி நடத்தினார்.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மவுலவி, அப்துல் ரஹீம் சுஹைப் ஸலாமி அவர்கள் ரமலானே வருக ! என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அவர் தங்கள் உரையில் கூறுகையில்... ரமலான் மாதம் என்பது மனித வாழ்வில் அவனுக்கு கிடைத்த மாபெரும் பொக்கிஷம் அந்த பொக்கிஷத்தை உணர்ந்தவர்களாக அதை அடைய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு யாரெல்லாம் ரமலானில் அமல்கள் செய்கிறார்களோ! அவர்கள் எண்ணிப் பார்க்காத அளவிற்கு நன்மைகளை அடைகின்றார். அதன் விளைவாக அவருக்கு சுவனத்தை அல்லாஹுத்தஆலா உறுதியாக்குவதாக அல்லாஹுத்தஆலாவும் அல்லாஹ்வுடைய தூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூறி இருக்கிறார்கள்.





ரமலானை பொறுத்த வரைக்கும் நாம் செய்கின்ற எந்த ஒரு காரியம் ஆனாலும் அதை

★ மனத்தூய்மையோடு
★ விருப்பத்தோடு

★ ஆசையோடு
★ கூலியை எதிர்பார்த்து

செய்கின்ற பொழுது அல்லாஹுத்தஆலா அதை முழுவதுமாக ஏற்றுக் கொண்டு கூலி வழங்குவதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ஒரு சகோதரனைப் பார்த்து நாம் புன்னகைப்பது கூட தர்மம் ஆகின்ற நோன்பு அல்லாத மற்ற காலங்களில் ரமலானில் சற்று எண்ணி பாருங்கள்! அல்லாஹுத்தஆலா நோன்பு திறப்பதற்கு ஒரு நோன்பாளிக்கு உதவி செய்கின்ற பொழுது ஒரு நோன்பாளிக்கு கிடைக்கக்கூடிய கூலியை போன்று அந்த நோன்பு திறக்க உதவி செய்ய கூடியவருக்கும் சேர்க்கப்படுகிறது என்று சொன்னால். இப்படி ஒரு மனிதன் 30 நாளும் இன்னொரு நோன்பாளிகளுக்கு நோன்பு திறக்க கொடுக்கின்ற பொழுது அவருடைய கணக்கு எப்படி ஆகின்றது?
60 நோன்பு நோற்றத போன்ற அவர் நன்மைகளை அடைந்து கொள்கிறார்.

இப்படி ரமலானில் இருக்கக்கூடிய அனைத்து வகையான நன்மைகளும் நாம் எண்ணிப் பார்க்காத வகையில் நமக்கு வந்து சேருகிறது என்பதை அவருடைய உரையில் மிக அழகிய முறையில் எடுத்துக் கூறினார். இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது. நிகழ்ச்சி துஆ வுடன் இனிதே நிறைவடைந்தது.

## மக்தப் மதரஸா ஆண்டு விழா...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் கிளையில் சார்பாக நகரின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் குழந்தைகள் மக்தப் மதரஸா ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றன.

மக்தப் மதரஸா ஆண்டுவிழா வெங்கடேஷயா காலனி, ரேணுகா நகர்,
முதலிபாளையம் ஹவுசிங் யூனிட், பழவஞ்சி பாளையம், கதிர் நகர், ஆகிய பகுதிகளில் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மதரஸா மாணவ மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

கிராத் ஓதுதல், பாங்கு சொல்லுதல், வினாடி வினாக்கள், ஹதீஸ் மனனம்,



துவா மனனம்ம், குர்ஆன் மனனம், பட்டிமன்றம் என்று பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் அனைவருக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநகர, கிளை பொறுப்பாளர்கள், நன்கொடையாளர்கள் சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். மாணவ மாணவிகளின் திறமைகளை பார்த்து அவர்களை பெற்றோர்கள் மனமார்ந்த பாராட்டினார்கள் வாழ்த்துக்கள் பரிமாறினார்கள். இந்நிகழ்வில் மாணவ. மாணவிகள், பெற்றோர்கள் ஆர்வமாக, திரளாக கலந்து கொண்டார்கள்.

## ரமலானே வருக!

திருப்பூர் கிளை 23.2.2024 முதல் 26/2/25 வெவ்வேறு பகுதிகளில் ரமலான் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது



1)அமர்ஜோதி கார்டன்
2) குமாரசாமி காலனி
3) முத்தனம் பாளையம்
4) முதலிபாளையம் ஹவுசிங் யூனிட்
5) ரேணுகா நகர், நல்லிக்கவுண்டர் நகர்
6) பெரிய கடை வீதி
7) திருநகர்

போன்ற இடங்களில் நிகழ்ச்சி நடைபெற்றன.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் 80 மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். ரமலானின் நோக்கம் குறித்தும், ரமலானை நாம் முழுமையாக பயன்படுத்திவது, ரமலான் நமக்கு கிடைத்த எவ்வளவு பெரிய அருளுக்குரிய மாதம் அதனை வீணாக்கி விடாமல் முழுமையாக பயன்படுத்தி நன்மைகளை கொள்ளை அடித்துக் கொள்ள வேண்டும் என்ற வகையிலும். இஸ்லாத்தை முழுமையாக நாம் பின்பற்றுவதும் நம் பகுதியில் அதனை முழுமையாக நிலை நிறுத்த வேண்டியது நமது கடமை எனும் வகையில் சிறப்பு பேச்சாளர்கள் அனைத்து இடங்களிலும் உரைகள் நிகழ்த்தினார்கள்.

## ரமலானே வருக ! சிறப்பு நிகழ்ச்சி

*இராமநாதபுரம் சிக்கல் பகுதி மதீனா நகரில் 25.2.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6:30 மணி முதல் இரவு 8:00 மணி வரை நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணை செயலாளருமான ஜனாப்; நஜீர் ஹுஸைன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.*

*இந்நிகழ்ச்சிக்கு மதீனா நகர் ஜமாஅத் தலைவர் ஜனாப் முஸ்தபா அவர்கள் தலைமையேற்று நடத்தினார். இந்நிகழ்ச்சியை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் மதீனா நகர் ஜும்மா பள்ளிவாசல் இமாமான ஆலிம், முஹம்மது ரபிக் தாஃவதி அவர்கள் ஏற்பாடு செய்து அழகுற வழி நடத்தினார்.*

*சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த ஜனாப் நஜீர் ஹுஸைன் அவர்கள் ரமலானே வருக எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார் அவர் உரையில் கூறுகையில்...*

*ஒவ்வொரு ஆண்டும் ரமலானே வருக நிகழ்ச்சி நடத்துவது ரமலானை குறித்து மக்களுக்கு நினைவூட்டுவதற்காக மட்டுமல்ல மேலும் ,ரமலானே வருக நிகழ்ச்சி என்பது மக்கள் கூடி களைய கூடிய ஒரு நிகழ்வு கிடையாது மாறாக இந்த ரமலானே வருகை நிகழ்ச்சி என்பது ஒரு சுன்னத் ஆகும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர் வாழுகின்ற காலம் முழுவதும் ஷாபான் மாதத்தின் கடைசி நாட்களில் தங்கள் குடும்பத்தார்களை உறவுகளை சஹாபாக்களை சமூகத்தை நினைவு படுத்தினார்.*

*எப்படி? மனிதர்களே! இதோ அருள் வளமிக்க மகத்துவமிக்க மாதம் ஒன்று வர காத்திருக்கிறது நீங்கள் தயாராகிக் கொள்ளுங்கள் என்று அந்த அடிப்படையில் தான் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. ஆகவே, இது ஒரு இபாதத். இது ஒரு சுன்னத் என்ற எண்ணத்துடன் நாம் இந்த நிகழ்ச்சியில் அமர வேண்டும்.*

*இந்த இபாதத்துக்கு தயாரானவர்களாக சுன்னத்தை ஹயாத் ஆக்க கூடியவர்களாக நாம் இருக்கிறோமா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். காரணம், இந்த ரமலானின் மூலம் அல்லாஹுத்தஆலா தரக்கூடிய பரிசு என்பது இறை நம்பிக்கை கொண்டு வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனும் ஆசைப்படக்கூடிய சுவனம் அந்த சுவனத்தை பெறுவதற்கு உண்டான தகுதிகள் நம்மிடத்தில் இருக்கிறதா?*

*அதற்குண்டான நற்காரியங்களில் நாம் ஈடுபடுகின்றோமா? இந்த ரமலானை நாம் முழுமையாக அதற்காக பயன்படுத்துகிறோமா? என்பதை நாம் சுய ஆய்வு செய்ய வேண்டும். காரணம், பல மனிதர்களுக்கு ரமலானை அடையக்கூடிய பாக்கியம் கிடைக்காத நிலையிலும் நமக்கு அல்லாஹ்வின் அருளால் இந்த ஆண்டு ரமலானை அடையக்கூடிய பாக்கியம் கிடைத்துள்ளது இங்கு கூடிய மக்களுக்கும் கிடைத்திருக்கிறது என்றால் நாம் எவ்வளவு கவனமாக, ஆர்வமாக, முனைப்போடு இந்த ரமலானில் நாம் பயணிக்க வேண்டும்.*

*ரமலான் மூலமாக பெறக்கூடிய காரியங்கள் ஏராளம் ஏராளமாக இருக்கின்றன.*

*★ தொழுதால் நாம் எண்ணிப் பார்க்காத நன்மைகள் கிடைக்கின்றது*

*★ தர்மம் செய்தால் நினைத்துப் பார்க்காத அளவிற்கு நற்கூலி கிடைக்கிறது.*

*★ ஒருவருக்கு நோன்பு திறக்க உதவினால் நோன்பு நோற்றவருடைய கூலியை போன்று உதவியிருக்கும் கிடைக்கிறது.*

*★ ஏழை எளிய ஓரிடத்தில் அன்பாக நடந்தால் அல்லாஹுத்தஆலா நம் மீது அளப்பரிய அன்பு செலுத்துகின்றான்.*

*★ பாவங்களில் இருந்து மீண்டு இருந்தால் அல்லாஹுத்தஆலா பெருமை கொள்கின்றான்.*

*★ பசித்திருப்பதாலும் தாஹித்திருப்பதாலும் அல்லாஹுத்தஆலா திருப்தி அடைவது அல்ல அந்த நிலையில் இருந்து கொண்டு இறைவன் விரும்பக்கூடிய காரியங்களை நாம் செய்கின்ற பொழுது அல்லாஹ் மகிழ்ச்சி அடைகின்றான்.*

*அதே வேளையிலே நாம் நோன்பு நோற்றும் நாம் இரவிலே தொழுது கொண்டும் மற்ற மாதங்களில் செய்கின்ற கவனக் குறைவான செயல்பாடுகள் இந்த ரமலானிலும் இருந்தால் அல்லாஹுத்தஆலா எந்த விதமான நன்மையும் நமக்கு தருவதற்கு முன் வர மாட்டான் என்பதை புரிய வேண்டும்.*

*ஆகவே இந்த ரமலானை நாம் பயபக்தியோடு நன்மை எதிர்பார்த்து நற்கூலி பெறுகின்ற எண்ணத்தோடு அமல் செய்ய வேண்டும். இந்த ரமலானின் சிறப்பு என்னவென்றால் அல்லாஹ் மனிதன் செய்கின்ற எந்த ஒரு அமலும் அல்லாஹுத்தஆலாவின் விருப்பத்திற்குரியதாக இருந்தால் அதை பன்மடங்காக பெருக்கி நன்மை தருகின்றான். எடுத்துக்காட்டுக்காக; ஒன்றை பாருங்கள் இம்மாதத்திலே ஒரு*

*★ நபில் தொழுதால் சுன்னத்திற்கான நன்மை கிடைக்கின்றது*

*★ சுன்னத்தை நாம் நிறைவேற்றினால் பர்ளுக்குரிய நன்மை கிடைக்கிறது*

★ ஃபர்லை நிறைவேற்றினால் 70 ஃபர்லை நிறைவேற்றியதற்கான நன்மை கிடைக்கிறது என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.

11 மாதங்களில் நாம் ஐவேளை தொழுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள் அந்த ஐவேளை தொழுகைக்கான கூலி ஒரு ஃபர்லின் நிறைவேற்றுகின்ற பொழுது ஒரு பர்ளுக்கு ஒரு நன்மை ஐந்து நேரத்தை நாம் 11 மாதங்கள் கணக்கிடுகின்ற பொழுது




11×30= 330

330×5= 1650 நன்மைகள்

ரமலானில்

30×5=150

150×70= 10,500 நன்மைகள்

ரமலான் ஒரு அமல் செய்கின்ற பொழுது எந்த அளவுக்கு இறைவன் அதிகப்படுத்தி தருகிறான் என்பதை கவனியுங்கள்.
அல்லாஹுத்தஆலா இந்த ரமலானை வழங்கி இதில் அமல் செய்து நம்மை பரிசுத்தவான ஆக்கி சொர்கத்துக்குரியவர்களா, மறுமையில் ரய்யான் என்று சொர்க்கத்திலே நுழைவிப்பதற்கும் ரமலான் மாதம் முழுவதும் நமக்கு ஆயத்தம் ஆக்கி தந்திருக்கிறான்.

அதனால் நாம் முழுமையாக ரமலானை அடைந்து அவன் தரக்கூடிய சுவனம் செல்லக்கூடிய பாக்கியத்தை அடைய வேண்டும். என்ற பல செய்திகளை அவருடைய உரையிலே மிக ஆழமான சிந்தனை தரக்கூடிய வகையில் எடுத்துரைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மதீனா நகர் ஜமாத்தார்கள் ஆண்களும் பெண்களும் இளைஞர் இளைஞிகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

## ரமலானே வருக!

மதுரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பெண்கள் வட்டம் சார்பாக ரமலானே வருக நிகழ்ச்சிகள் மதுரை மாநகரில் 23 இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மஹபூப்பாளையம், முனிச்சாலை,சொக்கலிங்க நகர், நரிமேடு, புதூர், பொறியாளர் நகர், R.R.Nager, தமிழன் தெரு, சம்பக்குளம், டி.ஆர்.ஓ.காலனி, நெல்பேட்டை, கோரிப்பாளையம், கடைச்சநேந்தல் வில்லாபுரம், ஜெயந்திபுரம், காமாட்சிபுரம் சந்தைப்பேட்டை ஆகிய வட்டங்களிலும் சீலையநேரி, கருவனூர் கிராமம், ஒத்தைக்கடை ஆகிய 3 புதிய இடங்களிலும் ரமளானை வரவேற்போம் நிகழ்ச்சி



நடைபெற்றது. ஒவ்வொரு வட்டங்களிலும் ரமலானை பற்றிஇரண்டு தலைப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. "ரமலானின் எதிர்பார்ப்பும் லட்சியமும் " என்ற தலைப்பிலும் "ரமலானில் குர்ஆனுடன் நாம்" என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தப்பட்டது.

ஏறக்குறைய 850 பெண்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளார்கள். 20 இடங்களில் உதயதாரகை புத்தகம் அறிமுகம் செய்து சந்தா சேகரித்துள்ளோம்.

## ரமலான் சஹர் கிட் 2025

ரமலான் சஹர் கிட் 2025 ரமலான் மாதத்தில் ஏழை எளிய குடும்பத்தினர்கள் சிரமமின்றி நோன்பு நோற்பதற்கு இலகுவாக அரிசியுடன் மளிகை பொருட்கள் அடங்கிய கிட்டுகள் மதுரை மாநகர் முழுவதும் 230 கிட்டுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

## மதுரை யாதவா கல்லூரியில் போதை இல்லா சமூகம்.

மதுரை யாதவா கல்லூரியில் போதை இல்லா சமூகம் ,JIH மதுரை அமீரே மகாமி மௌலவி முஹையுத்தீன் உமரி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.




மதுரை யாதவா கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்அணி நடத்திய சிறப்பு முகாமில் 4.3.25 அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரைக் கிளையின் அமீரேமகாமி, மௌலவி முஹைதீன் உமரி கலந்து கொண்டு போதைஇல்லாத சமூகம் உருவாக்குவோம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள், இதில் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## மதநல்லிணக்க மாநாடு மதுரை JIH பிரதிநிதிகள் பங்கேற்பு.

*மதநல்லிணக்க மாநாடு மதுரை JIH பிரதிநிதிகள் பங்கேற்பு மதுரை மதநல்லிணக்க கூட்டமைப்பு சார்பாக 09. 03. 25 ஞாயிற்று கிழமை மாலை 7:00 மணிக்கு நீதியரசர்.*




*கிருஷ்ணயர் அரங்கத்தில் மதநல்லிணக்க மாநாடு நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக தொல். திருமாவளவன் MP, அப்துல் சமது MLA ,நெல்லை முபாரக் சித்தர். முங்கில் அடிகளார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர் இதில் JIH சார்பில் அதன் பிரதிநிதிகள் கலந்து கொண்டோம்.*

## சமூக நல்லிணக்க நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

*சமூக நல்லிணக்க நோன்பு திறக்கும் நிகழ்ச்சி. அஸ்ஸலாமு அலைக்கும் நன்மைகள் பூத்துக் குலுங்கும் இந்த ரமலான் மாதத்தில் ஒவ்வொரு ரமலான் மாதத்திலும்.*

*நம்முடைய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அனைத்து மக்களோடும் இணைந்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தி வந்து கொண்டிருக்கிறது.*

*அதன் அடிப்படையில் இந்த வருடமும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்திய வண்ணம் இருக்கிறது.ஒரு காலத்திலே நோன்பு திறக்கின்ற நிகழ்ச்சி எப்படி நடக்கும் என்றால் மக்களை நம்முடைய இடத்திற்கு வரவழைத்து நோன்பு திறப்பது தான் வழக்கம்.*

*ஆனால் போன வருடத்திலிருந்து நம் இருக்கும் இடத்திற்கு மக்களை அழைப்பதை விட்டுவிட்டு அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி நாம் சென்று மக்களோடு மக்களாக நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தியது வந்து அதன் அடிப்படையில் இந்த வருடமும் அதே பாணியில் மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை மன்னார்குடி ஜமாத் நடத்தி வருகிறது இதுவரை மன்னார்குடியில் உள்ள நான்கு இடங்களுக்கு மேற்பட்ட இடத்தில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை*

*நடத்தி முடித்திருக்கிறது. முதல் இஃப்தார் அமர்வு மன்னார்குடி கிளை கார்கூன் சகோதரி.பீபீ ஜான் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இதில் கிளை மகளிரணி பொறுப்பாளர் சகோ. சஹானாஸ் அவர்கள் ரமலான் கூறும் சமூக என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.இந்த அமர்வில் பிறசமூக மக்கள் 4 பேர் அவர்கள் பிள்ளைகளுடன் கலந்துகொண்டனர். நோன்பு திறந்த பிறகு அவர்களுக்காக இஸ்லாம் ஓர் அறிமுகம் என்ற கருப்பொருளில் சுமார் 20 நிமிடங்கள் அவர்களுடன் கலந்துரையாடினர்.*

*★2-ஆம் அமர்வு★*

*2-ஆம் இஃப்தார் அமர்வு மன்னார்குடி கிளை கார்கூன் சகோ. முகமது ஜபருல்லா இல்லத்தில் நடைபெற்றது. இதில் கிளை Sio பொறுப்பாளர் மவ்லவி.அப்துல் முக்ஸித் ஸலாமி அவர்கள் ரமலான் கூறும் சமூக மாற்றம் என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.இந்த அமர்வில் பிறசமூக மக்கள் சுமார் 20 நபர்கள் கலந்துகொண்டனர். சுமார் 30 முஸ்லீம் சமூகத்தினர் கலந்துகொண்டனர். நோன்பு திறந்த பிறகு அவர்களுடன் உரையாடல் நடைபெற்றது.*

*★3-ஆம் அமர்வு★*

*3-ஆம் இஃப்தார் அமர்வு மன்னார்குடி கிளை கார்கூன் சகோ.அகமது தம்பி இல்லத்தில் நடைபெற்றது. இதில் கிளை Sio பொறுப்பாளர் மவ்லவி.அப்துல் முக்ஸித் ஸலாமி அவர்கள் ரமலான் கூறும் சமூக மாற்றம் என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.இந்த அமர்வில் சகோதர சமுதாயமக்கள்  10 நபர்கள் கலந்துகொண்டனர். சுமார் 65 முஸ்லீம் சமூகத்தினர் கலந்துகொண்டனர்.*

*★சமூகங்களுடன் இஃப்தார்★*

*★4-ஆம் அமர்வு★*




*4-ஆம் இஃப்தார் அமர்வு மன்னை இஸ்லாமிய தோழமைகள் (MIT) சார்பாக Eurokids பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் கிளை ★Sio பொறுப்பாளர் மவ்லவி. அப்துல் முக்ஸித் ஸலாமி ★அவர்கள் திருமறை ஓத துவங்கி வைக்க, MIT பொருளாளர் சகோ.MRK நாசர் இவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.*

*★சகோ. கமாலுதீன் (தலைவர்,சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு,தமிழ்நாடு)★அவர்கள் ரமலான் கூறும் சமூக மாற்றம் என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.இந்த அமர்வில் மன்னார்குடி நகராட்சி சேர்மன்,துணை சேர்மன் ஆகியோர் பங்கேற்றனர். சகோதர சமுதாயமக்கள் சுமார்40நபர்கள் உட்பட மொத்தம் 125 நபர்கள் கலந்துகொண்டனர்.*

## சகோதர சமயத்தவர்களுடன் இப்தார் நிகழ்ச்சி.




*நன்மைகள் பூத்துக் குலுங்கும் ரமலான் மாதத்தில். சகோதர சமய சகோதரர்களுடன் இணைந்து நோன்பு துறக்கும் நிகழ்ச்சியை மன்னார்குடி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தொடர்ந்து பல வருடங்களாக நடத்திக் கொண்டு வருகிறது. முன்பெல்லாம் மக்களை ஒரு இடத்திற்கு அழைத்து வந்து அங்கே நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. ஆனால் கடந்த வருடம் முதல் (மக்களோடு நாம்) என்ற பாணியில் மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று நோன்பு துறக்கும் நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தியது இந்த வருடமும் அதே பாணியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மக்களோடு மக்களாக மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று அவர்களுடன் நோன்பு துறந்து மக்களோடு கலந்து உரையாடி வருகிறது.*

*இதுவரை தொடர்ந்து நான்கு நிகழ்ச்சிகளை மன்னார்குடி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தி உள்ளது. மேலும் சில நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

## சமூக நல்லிணக்க இஃப்தார்

*09/03/2025 ஞாயிற்றுக்கிழமை குடியாத்தம் நகரில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளையின் சார்பாக சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நகரத் தலைவர் இக்பால் அஹ்மத் தலைமையேற்றார்,ஆசிரியர் சையது அப்துல் காதிர் உமரி முன்னிலை வகித்தார், யாசிர் அரஃபாத் இறை மறை வசனங்களை வாசித்து துவக்கிவைத்தார்.ஆசிரியர் நூருல்லாஹ் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் நகர மன்றத் தலைவர் எஸ்.சௌந்தரராஜன், கவிஞர் பாரிவேந்தர், கல்வியாளர் மஹாராஜன், இந்து சமத்துவ கட்சியின் வேலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.*

*உமர்ஆபாத், ஜாமியா தாருஸ்ஸலாம் அரபிக் கல்லூரி பேராசிரியர் எஸ்.ஜமாலுதீன் உமரி சமூக நல்லிணக்கம் நாட்டின் அவசியம் என்றும் பன்மை சமூகத்தில் நாம் ஒருவரையொருவர்*

*புரிந்து கொண்டு பண்புடன் வாழவேண்டும் என்பதையும் வலியுறுத்தி சிறப்புரையாற்றினார். இறுதியாக பேராசிரியர் அப்துல் காதிர் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் அனைத்துக் கட்சி பிரமுகர்கள்: என்ஜினீயர் D.சுனில், R.M.அமானுல்லா, நகர மன்ற உறுப்பினர்கள்: கவிதா பாபு, ஜாவித் பாய் ஆசிரியர் மற்றும் பேராசிரியப் பெருமக்கள், நகரப் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் சமத்துவ சமபந்தி விருந்து அளிக்கப்பட்டது.*




## மகளிர் சமூக பணி நிலையம் விஜயம்

*10-3-2025 திருப்பூர் முத்தணம்பாளையம் ரோடு நல்லூரில் இயங்கி வரும் மரியா தொழிற்பயிற்சி மையம் ரிதம் பெண்கள் சமூகப்பணி நிலையம் சென்று "மகளிர் தினம்" சிறப்பு நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி சார்பில் உறுப்பினர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். இதில் சிறப்பு விருந்தினராக ஜமாஅத் பெண்களை அறிமுகப்படுத்தினார் SIster Anitha அவர்கள். பிறகு ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள் சிற்றுரை நிகழ்த்துமாறு கேட்டுக் கொண்டார்.*

*சகோதரிசம்சியா, சகோதரி ஹம்ஸா மற்றும் சகோதரி ஷகிலா ஆகிய மூவரும் வாய்ப்பை பயன்படுத்தி உரை நிகழ்த்தினார்கள்.*

*மேலும் புத்தகங்கள் மற்றும் ஸ்வீட் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.*



# கோவையில் சங்கமித்த நூற்றுக்கணக்கான ஆலிமாக்கள்! ஹிதாயா இஸ்லாமியக் கல்லூரி முன்னாள் மாணவிகள் ஒருங்கிணைந்த இஃப்தார் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

*ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரியில் கடந்த 14 வருடங்களாக பயின்ற முன்னாள் மாணவிகள், தற்போதைய மாணவிகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் ஒன்று கூடிய மாபெரும் இஃப்தார் நிகழ்வு கோவை ஃபாத்திமா கனி மண்டபத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை (15 மார்ச் 2025) அன்று நடைபெற்றது.*

*ஹிதாயா கல்லூரியில் பயின்று தற்போது பல்வேறு இடங்களில் இஸ்லாமியப் பணி செய்துவரும் ஆலிமாக்கள் இந்நிகழ்வுக்காக தங்களுடைய கணவர்கள், குழந்தைகளோடு இஃப்தார் நிகழ்வுக்காக ஒருங்கிணைந்தனர். பல வருடங்கள் கழித்து சந்தித்துக் கொண்ட தோழியர்கள் அனைவரும் நலம் விசாரித்து, பேசி, மகிழ்ந்து இஃப்தார் நிகழ்வு ஒரு விழாவாக, ஒரு சிறப்பான ஒன்றுகூடலாக மாற்றியமைத்தனர்.*

*ஹிதாயா கல்லூரி மாணவி சகோதரி. அஸ்மிதா அவர்கள் இறைவசனங்களை ஓதி நிகழ்வினை தொடங்கி வைத்தார். தொடர்ந்து ஹிதாயா முன்னாள் மாணவிகள் சங்கத்தின் தலைவர் ஆலிமா. சுமையா ஹாதியா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.*

*அதனையடுத்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகர மனிதவள மேம்பாட்டுத்துறை செயலாளர் மௌலவி. முஹம்மது இஸ்மாயில் இம்தாதி அவர்கள் சிறப்புரையாற்றினார். ஹிதாயா இஸ்லாமியக் கல்லூரியை சமூக முன்னேற்றத்திற்காக நடத்தி வரும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாடெங்கும் செய்துவரும் பணிகள் குறித்தும், அதில் இணைந்து செயலாற்ற வேண்டிய அவசியம் குறித்தும் ஹிதாயா கல்வி அறக்கட்டளையின் தலைவர் ஜனாப். P.S. உமர் ஃபாரூக் அவர்கள் இலத்திரனியல் நிகழ்த்துகை (Powerpoint Presentation) மூலம் கலந்துரையாடினார்.*

*தொடர்ந்து ஹிதாயா கடந்து வந்த பாதை – காணொளிப்பதிவாக திரையிடப்பட்டது. தாங்கள் கடந்து வந்த பாதையினை மாணவிகள் மகிழ்வோடு பார்த்து கடந்த கால நினைவுகளை மீட்டனர். இறுதியாக முன்னாள் மாணவிகள் சங்கத்தின் செயலாளர் ஆலிமா. ஆயிஷா சுமையா ஹாதியா அவர்கள் நன்றியுரையாற்றினார்கள்.*




*நிகழ்வினை பல்வேறு நினைவுகளை மீட்டமைத்து அழகுற தொகுத்து வழங்கினார் ஹிதாயா கல்வி அறக்கட்டளையின் இணைச் செயலாளர் ஆசிரியர். M. சலீம் அவர்கள்.*

*தொடர்ந்து இஃப்தார் மற்றும் விருந்து நடைபெற்றது. நிகழ்வில் ஹிதாயா கல்வி அறக்கட்டளை பொறுப்பாளர்கள், அறங்காவலர்கள், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரப் பொறுப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். அல்ஹம்துலில்லாஹ்.*

## சமூக நல்லிணக்க இஃதார் நிகழ்ச்சி



*சமூக நல்லிணக்க இஃதார் நிகழ்ச்சி 15.03.25 சனிக்கிழமை அன்று மதுரை கோரிப்பாளையம் ரம்ஜான் மஹாலில் நடைபெற்றது*

*இதில் மூன்று மத பிரதிநிதிகளும் பங்கேற்று உரையாற்றினார். சாலிடாரிட்டி செயலாளர் சையது உசேன் அவர்கள் மனித கூட்டங்கள் தங்களுக்குள் உண்டான உரிமைகளையும் பொறுப்புகளையும் புரிந்து கொண்டு செயலாற்றுவதே மனித நல்லிணக்கத்தின் மறுமலர்ச்சி என்று சிறப்புரையாற்றினார்.*

## சமூக நல்லிணக்கம் போற்றும் நோன்பு கஞ்சி

*சமூக நல்லிணக்கங்கள் பல பகுதிகள் சிறப்பாக இருக்கின்றன. சில பகுதிகள் சிதைந்து இருக்கின்றன. இதை அனுதினமும் நாம் பார்த்து வருகின்றோம் ஆனாலும் பல இடங்களில் சமூக நல்லிணக்கத்தையே பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றார்கள் அப்படியான நிகழ்வுகள் நடைபெறுகின்ற பொழுது மக்கள் மத்தியில் பெரும் ஆதரவும் ஒத்துழைப்பும் பிரார்த்தனையும் கிடைக்கின்றது.*

இதை உண்மைப்படுத்தும் விதமாக ரமலான் மாதங்களில் பல நிகழ்வுகள் சமூக நல்லிணக்கத்தை போற்றும் வகையில் நடைபெற்று வருவது அனைவருக்கும் தெரிந்த உண்மைதான்.

ரமலான் மாதத்தில்
★ இப்தார் நிகழ்ச்சிகள் மூலமாக சமூக நல்லிணக்கத்தை நாம் பறைசாற்றுகின்றோம்.
★ பெருநாளன்று வாழ்த்துக்களை தெரிவிப்பதன் மூலமாக சமூக நல்லிணக்கத்தை நாம் பறைசாற்றுகின்றோம்.
★ பல ஊர்களில் பள்ளிவாயலுக்கு நோன்பு கஞ்சி காய்ச்சுவதற்கான தொகையை கூட தொப்புள் கொடி உறவுகளான சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்கள் வழங்கி வருவதை சமூகத்தில் சமூக நல்லிணத்திற்கான முன்னெடுப்பாக இருந்து வருகின்றது.

இப்படி ஒட்டுமொத்த மனித சமூகத்திலும் சமூக நல்லிணக்கத்தை போற்றும் வகையிலும் அதை நிலைநாட்டும் வகையிலும் பல நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

அதேபோன்றுதான் நம்முடைய பகுதிகளிலும் பல இடங்களில் அந்தந்த பகுதியில் வாழ் மக்கள் சமூக நல்லிணத்தை மதிக்கும் வகையில் அதற்கான ஆதரவு தெரிவிக்கும் வகையில் வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்டும் வகையில் நோன்பு கஞ்சி வாங்கி அருந்துவதை பார்க்கிறோம் !

ரமலான் மாதங்களில் முஸ்லிம்கள் அவருடைய விரதங்களை நோன்பை துறப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு உணவு நோன்பு கஞ்சி அந்த நோன்பு கஞ்சியை இன்றைக்கு சகோதர சமுதாயத்தவர்கள் காலம் தொண்று தொட்டு நோன்பு கஞ்சி வாங்கி நமக்கும் அவர்களுக்குமான சகோதரத்துவத்தை உறுதிப்படுத்த கூடிய காட்சி இன்றளவும் பல பகுதிகளில் நடைபெற்று வருவது மகிழ்ச்சியான விஷயம்.



அந்த வகையில் நமது
★ குராயூர்
★ அணைக்கரைப்பட்டி
★ வன்னி வயல்
★ கோடாங்கி பட்டி

இப்படி 16 ஊர்களுக்கு மேலாக
பல இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## பெண்கள் தினம் சிறப்பு நிகழ்ச்சி

ஆண்டுதோறும் வரக்கூடிய மார்ச் 8 ம் தேதி பெண்கள் தினத்தை போற்றும் வகையில் காண்டை சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மதுரை மாவட்டம் காண்டை பகுதியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் காண்டை ஜும்மா பள்ளிவாசல் இமாமான மௌலவி அப்துல் மாலிக் ஸலாமி அவர்களும், காண்டை பஞ்சாயத்து தலைவர் தவமணி m.a, m.et அவர்களும் இணைந்து பெண்கள் தினத்தன்று சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து நிகழ்ச்சி நடைபெற்றது.
இந்நிகழ்வில் காண்டை முஸ்லீம் ஜமாத் தலைவர் அப்துல் மஜீத் அவர்களும் பங்கு எடுத்துக் கொண்டார்.

காண்டை பகுதியில் பெண்கள் மற்றும் அங்குள்ள பள்ளிக்கூடத்தில் பணி செய்கின்ற தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் ஆகியோர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்து இனிப்புகள் வழங்கி புத்தகங்கள் பரிசாக கொடுக்கப்பட்டு பொன்னாடைகள் போற்றப்பட்டு கௌரவிக்கப்பட்டன.

பெண்கள் தினம் சிறப்பு நாளன்று பள்ளிக்கூட மாணவ மாணவிகளுக்கு விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது அதில் பங்கு எடுத்தவர்களுக்கு பரிசுகளும் வழங்கி மகிழ்விக்கப்பட்டனர்.

மேலும்,அந்நிகழ்வில் கலந்து கொண்ட மவுலவி, அப்துல் மாலிக் ஸலாமி அவர்கள் பெண்கள் தின சிறப்புக்கான நாளை நினைவு கூறும் வகையில் உரை நிகழ்த்தினார். அவர் உரையில் கூறுகையில் பெண்களை போற்றும் நாட்டில் நாம் வாழுகின்றோம், பெண்களை மதிக்கக்கூடிய பண்புகளை குழந்தையிலிருந்து நமக்கு புகட்டப்பட்டிருக்கிறது. அனைத்து பெண்களையும் தாய் ஸ்தானத்திலும் சகோதரிகள் ஸ்தானத்திலும் பார்ப்பதற்கு பெற்றோர்கள் நமக்கு பயிற்சி தரப்பட்டு இருக்கிறார்கள்.

ஆனாலும் சமீப காலமாக பெண்கள் மீது இளைக்கக் கூடிய கொடுமைகளையும் அவலங்களையும் பார்க்கும் பொழுது மனிதர்கள் மிருகங்களாக மாறுகின்றார்களா? அல்லது அவர்களுக்கு புகட்டப்பட்ட



நல்லுரைகள் மறக்கடிக்கப்பட்டு இருக்கிறதா? தற்போது உள்ள தலைமுறைக்கு முன்னால் இருந்த தலைமுறைகளுக்கு சொல்லப்பட்டது போல அவர்களுடைய

குடும்பத்தார்கள் பெண்கள் மீது பார்க்கக் கூடிய பார்வைகளை கண்ணியமான பார்வையாக பார்க்க வேண்டும் என்று போதிக்கவில்லையா? என பெண்களுக்கு எதிராக நடைபெறக்கூடிய அநீதிகளின் கொடுமைகளையும் தங்களுடைய ஆதங்கங்களாக பதிவு செய்தார்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் பெண்கள் தின வாழ்த்துக்களை தெரிவித்து நிகழ்வை சிறப்பித்துக் கொடுத்தார்.

## இஃப்தார் நிகழ்ச்சி



ஜமா அத்தே இஸ்லாமி ஹிந்த் நீலகிரி மாவட்டம் சார்பாக, அல்லாஹ்வுடைய மாபெரும் கருணையினால் 12-03-2025 நோன்பு துறப்பு சிறப்பு நிகழ்ச்சி ஊட்டி YMCA , ஹாலில் மாலை 6:00 மணிக்கு நடைபெற்றது.

ஜனாப் ஹாஜா முஹைதீன் அவர்கள் திருமறை வசனங்களை ஓதி நிகழ்ச்சி ஆரம்பமானது சமரசம் பொறுப்பாசிரியர் ஜனாப் வி எஸ் முஹம்மது அமீன் அவர்கள் சிறப்புரையாற்றினார் நோன்பைப் பற்றிய பல்வேறு சந்தேகங்களுக்கு பதில் அளிக்க கூடியதாக அமைந்தது.

தொடர்ந்து கேள்வி பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக ஜனாப் அஹமத் பிலால் அவர்கள் நன்றி உரை வழங்கினார் இந்நிகழ்ச்சியை ஜனாப் முஹம்மத் பிலால் அவர்கள் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சகோதர சமுதாய மக்கள் 50 நபர்கள் கலந்து கொண்டனர். இரவு விருந்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

இந்நிகழ்ச்சி உண்டான ஏற்பாடுகளை செய்த குன்னூர் மற்றும் ஊட்டி சகோதரரகள் அனைவருக்கும் அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் நற்கூலி வழங்குவானாக.

## இப்தார் சங்கமம்

16.03.25 ஞாயிற்று கிழமை அன்று Sio இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பின் உறுப்பினர்களால் உறவுகளுக்கும் தோழமைகளுக்கும் ஜமாத்தை அறிமுகப்படுத்தும் இப்தார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள் - இதில் JIH மதுரை கிளையின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கபட்டிருந்தது.

இதில் JIH மதுரை கிளை மகாமி அமீர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.




அவர் பேசுகையில் நமது குறிக்கோளான தீனை நிலைநாட்டுவதன் பொருள் ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுள் தேய்வுற்று கிடக்கின்ற தீனின் அம்சங்களை புத்துயிருட்டி நிலை நிறுத்த முயற்சிப்பதே அதன் முக்கியமானதும் தொடக்க அம்சமுமாகும் என விவரித்தார்.

மேலும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் மாணவர்களிடையே ஒழுக்க மாண்புகளை வளர்பதிலும் Sioவின் வரலாற்றுபங்களிப்புயும் எடுத்துரைத்தார். ஏராளமான உறவுகளும் சகோதர சகோதரிகளும் பங்கேற்றனர்.

## இளைஞர்களுக்கான ஈமானிய விருந்து – இஃப்தார் ஒன்றுகூடல் நிகழ்ச்சி சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் சார்பாக நடத்தப்பட்டது.

இளைஞர்களை ஒன்றிணைத்து இஸ்லாமியப் பணிகளுக்கான உத்வேகத்தை வழங்கிட சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் சார்பாக இஃப்தார் நிகழ்ச்சி கோவை கரும்புக்கடை இஸ்லாமியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து ஞாயிறு (16 மார்ச் 2025) அன்று நடைபெற்றது.

சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் உறுப்பினர் சகோ.யாசிர் அவர்கள் இறைவசனங்களை ஓதி நிகழ்வை தொடங்கி வைத்தார். தொடர்ந்து சாலிடாரிட்டி அமைப்பின் கோவை மாவட்டத் தலைவர் முனைவர். அப்துல் ஹக்கீம் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S.உமர் ஃபாரூக் அவர்கள் வாழ்த்துரையாற்றினார்.




இளைஞர்கள் இஸ்லாமியப் பணிகளை கூட்டமைப்பாக ஒருங்கிணைந்து செய்திட வேண்டிய அவசியத்தை ஆசிரியர். M. சலீம் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்தார். சாலிடாரிட்டி அமைப்பின் கோவை மாவட்ட செயலாளர் சகோ. சினுஜ் அவர்களின் நன்றியுரை, துஆ உடன்



நிகழ்வு நிறைவு பெற்றது. நிகழ்வினை சகோ. அஜீஸ் அவர்கள் அழகுறத் தொகுத்து வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து இஃப்தார் விருந்து நடைபெற்றது. நிகழ்வில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இப்தார் நிகழ்ச்சி

கடந்த ஞாயிறு 16.03.25 அன்று நாளை காலடிப்பேட்டையில் ஒரு புதிய இடத்தில் ஆண்களுக்கான இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.



நிகழ்ச்சியில் மண்ணடி பகுதியை சேர்ந்த சகோதரர்.மன்சூர் அலி உமரி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். மேலும் சுமார் 60 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## சமய நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி

கும்பகோணம் மறை மாவட்டம் மற்றும் கும்பகோணம் சத்தியச் சோலை இணைந்து நடத்திய சமய நல்லிணக்க நோன்பு திறப்பு (இப்தார்) நிகழ்வு 18.3.2025 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.




கும்பகோணம் மறை மாவட்ட மேதகு ஆயர் ஜீவானந்தம் அமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

சமய நல்லிணக்க நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இந்த நிகழ்வில் சென்னையிலிருந்து வருகை புரிந்த ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில தலைவர் மௌலானா மௌலவி முஹம்மது ஹனிஃபா மண்பையி மற்றும் திருவடி குடிகள் சுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கும்பகோணத்தை சுற்றியுள்ள இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள், சமுதாய சகோதரர்கள், சகோதரிகள், மாணவர்கள் என்று 100 க்கு மேலானவர்கள் கலந்து கொண்டார்கள்.

*இந்நிகழ்ச்சியை கும்பகோணம் புனித ஜான் டி பிரிட்டோ மறை நிலையத்தில் நடைபெற்றது.*

## சமூக நல்லிணக்க நோன்பு துறக்கும் நிகழ்ச்சி

*ரமலான் மாதத்திலே தொடர்ந்து பல சமூக நல்லிணக்க நோன்பு துறக்கும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

*அதில் இன்று மன்னார்குடியில் அமைந்துள்ள மீட்டிங் பாயிண்ட் ரெஸ்டாரன்ட் நடைபெற்ற சமூக நல்லிணக்க நோன்பு துறக்கும் நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தியது.*



*இந்த நிகழ்ச்சி மிகவும் மனதுக்கு விருப்பமான நிகழ்ச்சியாக அமைந்தது. சகோதர சமய சகோதரர்கள் மிகவும் அதிக அளவில் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றது மகிழ்ச்சியடைய செய்திருக்கிறது.*

*சமூகங்களுடன் இஃப்தார்-12 சகோ.ரிழா திருமறை ஓத மவ்லவி. அப்துல் முக்ஸித் ஸலாமி நிகழ்ச்சியை வழிநடத்தினார். சகோ. அகமது தம்பி வரவேற்புரையுடன் கிளைத் தலைவர் சகோ.மன்சூர் அறிமுக உரை வழங்கினார். சகோ.ஃபக்ருதீன் அலி அகமத் அவர்கள் சமூகநல்லிணக்கத்தின் தேவையும் களச்சூழலும் என்ற கரைப்பொருளில் சிறப்புரையாற்றினார். CSI wesly சர்ச் பாதிரியார் திரு.சார்லஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.*

*இந்த அமர்வில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்த சுமார் 90 நபர்கள் உட்பட சுமார் 130 நபர்கள் கலந்துகொண்டர்கள்.*

## இஃப்தார் நிகழ்ச்சி

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தஞ்சாவூர் வட்டம் சார்பாக சமூக நல்லிணக்க இப்தார் விருந்துநிகழ்ச்சி மார்ச் 18ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பெசன்ட் லாட்ஜில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக எஸ் எஸ் பழனி மாணிக்கம் முன்னாள் நிதித்துறை அமைச்சர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். தஞ்சை மாநகர மேயர், துணை மேயர் மற்றும் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் ஆகியோரும் பங்கேற்று இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.*



இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய குடந்தை வி. ஃபக்ருதீன் அலி அஹ்மத் அவர்கள் சமூக நல்லிணக்கம், சமூக நீதீ கண்ணோட்டத்தில் இன்றைய சமூக அவலங்களையும், அவற்றிற்க்கான இஸ்லாமியத் தீர்வுகளையும் எடுப்பாக எடுத்துக்கூறி சிறப்பு உரையாற்றினார்கள்.

தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அமைப்புகளையும் உடன் சேர்த்துக்கொண்டு இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. 120 க்கும் மேற்ப்பட்ட நபர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக சகோதரத்துவ சங்கமம் இஃப்தார் (நோன்பு துறப்பு) நிகழ்ச்சி

சார்பாக சகோதரத்துவ சங்கமம் இஃப்தார் (நோன்பு துறப்பு) நிகழ்ச்சி 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை பழையப்பேட்டை சுப்பிரமணி மஹாலில் அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் துவக்கமாக மௌலவி இஸ்மாயில் ஃபலாஹி திருக்குர்ஆன் ஓதினார்.

திருக்குர்ஆனின் தமிழ் மொழியாகத்தை: சகோதரர் முஸ்டாக் அஹ்மத் வாசித்தார்



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நகர தலைவர் ஜனாப் சிபகத்துல்லாஹ் தலைமை வகித்தார்.

IMA கிருஷ்ணகிரி தலைவர் டாக்டர் S. மது முன்னிலை வகித்தார் சிறப்பு விருந்தினராக மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் திரு R.ராஜா கலந்துகொண்டு

சிறப்பித்தார்கள். கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் டாக்டர் முஹையுதீன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்த ஆண்கள் பெண்கள் 60 நபர்கள் கலந்து கொண்டனர், இறுதியாக.
சகோ. முஹம்மது மாஸ் நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியினை சகோதரர் இப்ராஹிம் சிறப்பாக வழி நடத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் JIH-ன் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## இஃப்தார் நிகழ்ச்சி பொள்ளாச்சி

23.3.25 ஞாயிறன்று மாலை பொள்ளாச்சி வட்டம் சார்பாக சகோதர சமயத்தவர்களுடன் இஃப்தார் விருந்து நடத்தப்பட்டது.

முன்னதாக நடைபெற்ற சொற்பொழிவில், தற்போதைய இந்திய சூழலில் மத நல்லிணக்கத்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.




இஸ்லாத்தைக் குறித்து தவறான பரப்புரையை முறியடிக்க நாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.

நோன்பு என்ற வணக்கத்தில் உள்ள மனிதநேயத்துக்கான அம்சங்களும் எடுத்துரைக்கப்பட்டது.

இறுதியில் ஏக இறை கொள்கையின் அடிப்படை விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டது.

## இஃப்தார் விருந்து

23/03/2025 ஞாயிற்றுக்கிழமை ஆம்பூர் உமர்ரோடு, கோட்டை பங்களா வீதியில் அமைந்துள்ள இஸ்லாமிய தகவல் மையத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் சார்பாக சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நகரத் தலைவர் சுபைர் அஹமது தலைமை தாங்கினார், சமூக ஆர்வலர் அஹ்மது அலீ, இன்ஜினியர் அமீனுர்ரஹ்மான், முத்தவல்லி சையது யாகூப் முன்னிலை வகித்தனர்.




செயலாளர் அப்துஸ்ஸலாம் அனைவரையும் வரவேற்றார்,

உமர்ஆபாத் அரபிக் கல்லூரி பேராசிரியர் ஜமாலுதீன் உமரி, சமத்துவம் சகோதரத்துவம் சமநீதி ஆகியவற்றின் மீது கட்டமைக்கப்பட்ட இஸ்லாமிய நெறி, தொழுகை நோன்பு ஜகாத்து ஹஜ் மூலமும் இன்னபிற வழிபாடுகளின் மூலமும் அதனை நடைமுறைப் படுத்தி வருகிறது.

மனிதநேயமும் மத நல்லிணக்கமும் குறைந்து, வெறுப்பும் குரோதமும் பெருகிப் போய், மனிதகுலம் மாபெரும் துயரங்களை சந்தித்து வருகிற இன்றைய காலச்சூழலில் இத்தகைய வாழ்வியல் நெறி அவசியமாகிறது. அனைத்து சமயங்களும் நன்நெறியை போதிக்கின்றன.

இதுபோன்ற முயற்சிகள் மூலம் மனித சமூகத்தில் மனிதநேயம் நல்லிணக்கம் மென்மேலும் வளரும் என நம்ப முடியும்
என்று விளக்கினார்.

இதில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகிகள் சி கே சுபாஷ், ஆர் ஞானசேகரன், கேஏஆர் பாலிடெக்னிக் முதல்வர் ராஜமன்னன், வழக்கறிஞர் பாபு, இன்ஜினியர் வெங்கடேஷ், நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் விஜயராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அனைத்து கட்சிப் பிரமுகர்கள், நகரப் பிரமுகர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள், பத்திரிக்கை நண்பர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர், இறுதியாக அனைவருக்கும் சமத்துவ சமபந்தி விருந்து அளிக்கப்பட்டது.

## புதுக்கோட்டை வழக்கறிஞர் சங்கத்தில் 40-வது ஆண்டு இப்தார் நிகழ்ச்சி

புதுக்கோட்டை வழக்கறிஞர் சங்கத்தில் 40-வது ஆண்டு இப்தார் நிகழ்ச்சி 27.03.2027ம் வியாழக்கிழமை தேதி மாலை 5.45-மணியளவில் வழக்கறிஞர் சங்கத்தலைவர் திரு.S.முத்தையன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக 1.மாண்புமிகு A.K. பாபுலால்அவர்கள் (அத்தியாவசிய பண்டங்கள் மாவட்ட சிறப்பு நீதிபதி) 2.மாண்புமிகு திருமதி G.M.வசந்தி, அவர்கள்

(கூடுதல் மாவட்ட நீதிபதி), 3.மாண்புமிகு செல்வி S.ஜெயந்தி, அவர்கள் (மாவட் குடும்பநல நீதிபதி), 4.மாண்புமிகு K.S. பால்பாண்டியன், அவர்கள் (தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்), 5.மாண்புமிகு V.வெங்கடேசபெருமாள், அவர்கள் (முதன்மை சார்பு நீதிபதி), 6.மாண்புமிகு L.ரகுபதிராஜா, அவர்கள் (கூடுதல் சார்பு நீதிபதி), 7.மாண்புமிகு C.பாரதி, அவர்கள் (குற்றவியல் நீதித்துறை நடுவர்), 8.மாண்புமிகு செல்வி D.பூர்ணிமா, (மாவட்ட உரிமையில் நீதிபதி) அவர்கள் மற்றும் பயிற்சி நீதிபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அஸ்ஸலாம் இஸ்லாமியக் கல்லூரியின் இயக்குநர், பேராசியர் அமானுல்லாஹ் சாஹிப் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மாண்புமிகு நீதிபதிகளுக்கு நினைவு பரிசாக திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய நூல்களை அஸ்ஸலாம் இஸ்லாமியக் கல்லூரியின் டிரஸ்டி ஜனாப் G.சையத் முஹம்மது ஸாஹிப் வழங்கினார்.

விழாவில் இஸ்லாமிய வழக்கறிஞர்கள் ஹாஜி,முகமது இக்பால், ஜனாப்,K.M.முகமது மைதீன், ஹாஜி.A.முகமது சிராஜூதீன், ஜனாப், ஹாஜி முகம்மது, ஜனாப்,முகமது ரபீக், ஜனாப்,நாசர், ஜனாப்,M.J.அமீர் உசேன், ஜனாப். அஜ்மல்கான், ஜனாப்,குலாம் நபி ஆசாத், ஜனாப், பாருக் அலி, ஜனாப்.அலாவதீன், திருமதி.பர்வின்பானு, திருமதி. ரைஹானா, ஜனாப்.குலாம் தஸ்தகீர், ஜனாப். முகமது கௌதர், ஜனாப், கலீல, ஜனாப்,புகாரி, ஜனாப்,எர்சாத் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வில் சுமார் 200-மேற்பட்ட முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத வழக்கறிஞர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர் முடிவில் வழக்கறிஞர் S.முகம்மது சுல்தான் நன்றியுரையாற்றினார்.



# பத்திரிகையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி

*கும்பகோணம், மார்ச் 25, 2025:*

ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை சார்பாக நடைபெற்ற பத்திரிக்கையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை ஜனாப் ஹாஜா மாலிக் அவர்கள் வழிநடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமை தாங்கினார். கும்பகோணம் மாநகர பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் வி. ராமச்சந்திரன் வாழ்த்துரை நிகழ்த்தினார். மேலும், திருச்சி அஸ்ஸலாம் காலேஜ் தாளாளர், திருச்சி ஜமாஅதே இஸ்லாமி ஹிந்த் கிளை தலைவர் மற்றும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் முனைவர் ஹஜ் மொய்தீன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் வி. ராமச்சந்திரன்:
"முதல் முறையாக இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் உள்ளது"

இதுகுறித்து அவர் கூறியதாவது:
"பத்திரிக்கையாளர் சங்கம் ஆரம்பித்து முதல் முறையாக இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறோம். இந்த மகிழ்ச்சியான நிகழ்வில் பங்கேற்பதில் எங்களுக்கு மிக்க சந்தோஷமும் பெருமையும் உள்ளது. சமூக ஒற்றுமை மற்றும் இனநல்லிணக்கத்தை வலியுறுத்தும் இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் வளர வேண்டும்" என்று தெரிவித்தார்.

வி. ராமச்சந்திரன் அவர்களின் இந்தப் பேச்சு, பல்வேறு சமூகப் பிரிவினரிடையே நட்புறவை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.



நிகழ்ச்சியின் இறுதியில், சகோதரர் முகமது ரியாஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும்

பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு, சமூக ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தியதாக அமைந்தது.

## சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி

சகோதர சமுதாய மக்களுக்கான இஃப்தார் நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதத்தில் சமூக நல்லிணக்கத்தை போற்றும் வகையில் ஒவ்வொரு பகுதிகளிலும் சகோதர சமுதாய மக்களுடன் இஃப்தார் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டும் பல்வேறு ஊர்களில் சகோதர சமுதாய சொந்தங்களுடன் இப்தார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றுள்ளது. அவ்வகையில்

மதுரை பகுதியில்

★ குராயூரில் சகோதர சமுதாய சகோதரிகளுக்கான சமுக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி. சிறப்பு விருந்தினராக மதுரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி பொறுப்பாளர் ஜரீனா யூசுப் கலந்து கொண்டார்கள்.

தேனி பகுதியில்

★ கோடாங்கி பட்டியில்



இராமநாதபுரம் பகுதியில்

★ தீன் நகர்

★ மக்கா நகர்

சிக்கல் பகுதியில்

★ ஓடை குளம் பகுதியில்

சகோதர சமுதாய மக்களுக்கு இஃப்தார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மிக சிறப்பான முறையில் அந்நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை அப்பகுதியில் உள்ள ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்களும், ஊழியர்களும் அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்து கலந்துரையாடல் செய்தார்கள் கலந்துரையாடல் மூலம் கூறுகையில்.....

ரமலான் என்பது வெறுமனே உண்ணாமல் இருப்பதை

அடையாளப்படுத்துவது அல்ல

★ ஒரு மனிதனை பக்குவப்படுத்தக் கூடியது

★ ஒரு மனிதனிடமிருந்து தீய பழக்க வழக்கத்தை அகற்றிவிட்டு நல்ல பண்புகள் கொண்ட பழக்க வழக்கங்களை உருவாக்குவது

★ ஒரு மனிதன் வாழுகின்ற பொழுது என் நிலையிலும் இன்னொரு மனிதனுக்கு தீங்கிழைக்காமல் இருப்பதற்கான பயிற்சியும்

★ மற்றவருடன் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சியும்

★ அனைவருடன் வாஞ்சையோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சியும்

★ மனிதர்கள் மீது அன்பும் இரக்கமும் காட்டுவதற்கான பயிற்சியும் அளிக்கப்படுவது தான் ரமலான் மாதம் என்றும் இந்த ரமலான் மாதத்தை பற்றி நபிகள் நாயகம் அவர்கள் சொல்லுகின்ற பொழுது மனிதர்களே அருள் வளமிக்க மாதம் வர இருக்கிறது என்று தான் சொன்னார்கள் ஆக அந்த வகையில் எல்லோருக்குமே இந்த மாதத்திலே இறைவனுடைய அருள் இருக்கிறது இறைவனுடைய அருள் பெற வேண்டும் நாம் மதங்களாக மார்க்கமாக பிரிந்து இருந்தாலும் மனிதர்களின் அடிப்படையில் நாம் ஒன்றினைய வேண்டும். சமூக நல்லிணக்கத்தை பேண வேண்டும். சமூக ஒற்றுமையாக வாழ வேண்டும். அதற்கு இந்த நோன்பும் இந்த இஃப்தார் நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று கலந்துரையாடல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

வருகை புரிந்த அனைத்து சகோதர சகோதரிகளுக்கு இப்தார் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு நோன்பு கஞ்சி , பதார்த்தங்கள், பழங்கள் வழங்கப்பட்டு இறுதியாக அவர்களுக்கு விருந்தும் அளிக்கப்பட்டது.

## இஃப்தார் நிகழ்ச்சி

ஆண்டுதோறும் வரக்கூடிய ரமலான் மாதத்தில் ஒவ்வொரு பகுதிகளிலும் இப்தார் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இந்த ஆண்டும் பல்வேறு ஊர்களில் இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

இஃப்தார் நிகழ்ச்சியின் மூலமாக

★ முஸ்லிம் சமூகத்திற்கு நோன்பின் நோக்கத்தையும்

★ நோன்பின் மூலமாக பெறவேண்டிய இறையச்சத்தையும்

★ நோன்பு தனி மனிதனிடத்தில் எதிர்பார்க்கக் கூடிய விஷயங்களையும்

★ நோன்பு கூட்டு சமூகத்தின் மூலமாக எதிர்பார்க்கக் கூடிய செய்திகளையும்

இஃப்தார் நிகழ்வின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது.
நோன்பு நோற்று அந்த மாதத்தை கடந்து செல்வது நோன்பின் நோக்கமல்ல ! நோன்பு என்பது சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அந்த சமுதாயம் இறையச்சம் உள்ள சமுதாயமாக வாழ வேண்டும்.



அதன் மூலமாக மனித குலத்திற்கு இஸ்லாத்தின் செய்திகளை அழகிய முறையிலே எடுத்துரைக்க வேண்டும்.

ஒரு தனி மனிதன் மீது இஸ்லாம் சுமத்தப்பட்ட கடமைகளை புரிய வைக்க வேண்டும். என்ற செய்திகளை தாங்கி இஃப்தார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு அந்நிகழ்விற்கு வரக்கூடிய அனைவர்களுக்கும் இந்த செய்தியை சமர்ப்பிக்கப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு
★ இராமநாதபுரம் பகுதியில் உள்ள ஊர்கள்
★ சிக்கல் பகுதியில் உள்ள ஊர்கள்
★ மதுரை பகுதியில் உள்ள ஊர்கள்
★ தேனி / விருதுநகர் பகுதியில் உள்ள ஊர்கள்

இஃப்தார் நிகழ்ச்சியில் மக்களை ஒருங்கிணைந்து நோன்பின் நோக்கத்தையும் அதன் மாண்பையும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

## கூட்டு ஸஹர்

கூட்டு ஷஹர் ஏற்பாடு ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதத்தில் கூட்டு ஷஹர் உணவு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ் இந்த ஆண்டும் கூட்டு ஷஹர் உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
மதுரை பகுதியில்
★ குராயூர்
★ அணைக்கரைப்பட்டி

★ சொக்கநாதன் பட்டி

ராமநாதபுரம் பகுதியில்
★ தீன் நகரில்
★ ஓடை குளம்
★ மறவாய்குடி
★ முஹமதியாபுரம்

இன்னும் சில ஊர்களிலும் கூட்டு ஷஹர் நடைபெற்று வருகிறது.



இந்த 2025 ம் ஆண்டும் ரமலான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் கூட்டு ஷஹர் மூலமாக நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள்கள் ஷஹர் செய்து வருகின்றார்கள். ஷஹர் உணவு ஏற்பாட்டுக்கான நோக்கம் என்னவென்றால்....

இன்று பல குடும்பங்களில் ஷஹர் உணவு செய்ய முடியாத சூழல் ஏற்படுகின்றது காரணம்
★ அந்த வீட்டில் நோன்பு நோற்பவர் ஒற்றை நபராக இருக்கலாம்
★ அல்லது உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதால் ஷஹர் உணவு ஏற்பாடு செய்யப்படாமல் போகலாம்
★ பயணத்தில் இருந்து வரக்கூடிய நிலையிலே சகர் உணவு கிடைப்பதற்கு சிரமமாக இருக்கலாம்

ஆக இப்படி பல காரணங்கள் இருக்கின்றன. எந்த ஒரு காரணத்தை காட்டியும் ஒரு நோன்பாளிக்கு உணவு கிடைக்காமல் இருந்து அதனால் அவர் நோன்பு நோற்காமல் விட்டு விடக்கூடாது என்பதற்காக இந்த உன்னத நோக்கத்தோடு ஒவ்வொரு பகுதிகளிலும் ஷஹர் உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் தீன்நகரில் தீன் நகர் ஜமாஅத் மூலமாக தொடர்ந்து இந்த ஆண்டு ரமலான் மாதத்தில் ஷஹர் உணவு ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## சகோதர சமுதாய சொந்தங்களுடன் இஃப்தார் நிகழ்ச்சி.

*சகோதர சமுதாய சொந்தங்களுடன் இஃப்தார் நிகழ்ச்சி 27/09/1446 (28/03/2025) வெள்ளிக்கிழமை மாலை கடையநல்லூர் JIH கிளை சார்பாக ஹிதாயத்துல் இஸ்லாம் மேல்நிலைப்பள்ளியில் வைத்து இஃப்தார் அமர்வு கிளைத் தலைவர் K. பீர் முஹம்மது தலைமையில் நடைபெற்றது. துவக்கமாக மௌலவி முஸம்மில் புகாரி திருமறை வசனங்கள் ஒதி துவக்கி வைத்தார். ராபிதத்துல் உலமா மாநிலச் செயலாளர் & அஸ்ஸலாம் இஸ்லாமிய கல்லூரியின் பேராசிரியர் மௌலவி அஹ்மத் முஹ்யித்தீன் ஃபைஜி ஜமாஅத் அறிமுக உரை நிகழ்த்தினார். எழுத்தாளர் சேயன் இப்ராஹீம் மற்றும் CITU தென்காசி மாவட்டச் செயலாளர் தோழர் மணிகண்டன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சமரசம் பொறுப்பாசிரியர் வி.எஸ். முஹம்மது அமீன் சிறப்புரையாற்றினார்.*

*இந்த நிகழ்ச்சியில் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த 40 சகோதர சகோதரிகள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் நோன்பு கஞ்சி மற்றும் உணவு பார்சல் வழங்கப்பட்டது நிகழ்ச்சியை ஜமாத் ஊழியர் முஹம்மது ரிழ்வான் வழிநடத்தினார். நிகழ்ச்சி ஏற்பாட்டை ஜமாஅத் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.*




## சமய நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி

*கும்பகோணம், மார்ச் 30, 2025: இன்று மாலை 5:30 மணியளவில், கும்பகோணம் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் (மஸ்ஜிதுர் ரஹ்மான், நைல் நகர், குறிஞ்சி நகர் பள்ளிவாசல்) மற்றும் ஜோதிமலை இறைப்பணி திருகூட்டம் இணைந்து சமய நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடத்தியது.*

*சிறப்பு விருந்தினர்கள்:*

*# அருட்பணி முனைவர் க.கோஸ்மான் ஆரோக்கியராஜ் (வட்டார முதன்மை குரு)*

*# திரு.திருவடிக்குடில் சுவாமிகள் (ஜோதிமலை இறைப்பணி திருகூட்டம் நிறுவனர்)*

இவர்கள் சமய ஒற்றுமை மற்றும் அன்பான வாழ்வியல் முறைகள் குறித்து உரையாற்றினர்.

சிறப்புரை:

ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாவட்ட அமைப்பாளர் ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள், "மத வேறுபாடுகளை மதித்தல், அன்பான உறவுகள் வளர்த்தல் மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவை இறையருளின் அடையாளங்கள்" என்று குறிப்பிட்டு, ரமலான் மாதத்தின் புனிதத்தை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:

மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளிவாசல் இமாம் மௌலவி அஹமது கபீர் மன்பையி அவர்கள் நிகழ்ச்சியை நடத்தி வைத்தார்.

பங்கேற்பாளர்கள்:

100க்கும் மேற்பட்ட பல்வேறு சமயத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சமூக ஒற்றுமைக்குஒரு சிறந்த எடுத்துக்காட்டை நிகழ்த்தினர்.



## ரமலான் வாழ்த்துப் பகிர்தல்



ஈதுல் பித்ர் ரமலான் பெருநாளை முன்னிட்டு சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு திருப்பூர் சார்பாக சகோதர சமுதாய மக்கள் அனைவருக்கும் ரமலான் வாழ்த்துக்களை பரிமாறும் வகையில், நல்லிணக்கம் மேலோங்க வேண்டும் என்ற அடிப்படையில் திருப்பூர் பிரதான சாலைகள், பழைய பேருந்து நிலையம், சிக்னல்கள், பேருந்து நிறுத்தங்கள்,



சாலையோர கடைகள் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் அனைத்திலும் ரமலான் வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன. அனைவரும் மிக மகிழ்ச்சியுடன் ரமலான் பெருநாள் வாழ்த்துக்களை சொல்லி மகிழ்ந்து நன்றி பாராட்டினார்கள்.

## ரமலான் பெருநாள் தொழுகை



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் கிளை சார்பாக ஈதுல் பித்ரு பெருநாள் தொழுகை மஸ்ஜிதுல் ஹுதா பள்ளி வளாகத் திடலில் காலை 7.30 மணிக்கு நடைபெற்றது.

மஸ்ஜிதுல் ஹுதா பள்ளி இமாம் அப்பாஸ் அலி அவர்கள் பெருநாள் தொழுகையை தலைமையேற்று நடத்தினர்.

பெருநாள் உரை உறுப்பினர் நஜீர் ஹுஸைன் அவர்கள் நிகழ்த்தினார். ரமலானின் நோக்கம், இறையச்சம்,மன்னிப்பு, பெருமை, ஆணவம், போன்ற குணங்கள் எல்லாம் இல்லாமல் மிகச்சிறந்த மூமின்களாக இருக்க வேண்டும் அதுதான் ரமலான் நமக்கு உணர்த்தும் பாடம் என்ற வகையில் சிறப்பாக உரை நிகழ்த்தினார்.

600 க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகள் பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டார்கள். உலக அமைதிக்காகவும், பாலஸ்தீன மக்களுக்காகவும், அநீதி இழைக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் அனைவரும் பிரார்த்தனை புரிந்தார்கள்.



தொழுகையில் கலந்து கொண்ட அனைவரும் ஒருவரை ஒருவர் கட்டி தழுவிக் ரமலான் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் பரிமாறி கொண்டார்கள்.